Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-22



க
ணே
சா
ந
கை
யு
க
ந்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:124, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10148)



நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-28 | 13-09-2004 | திங்கட்கிழமை | ஓசை -208


## சிறிலங்கா ஆட்சியாளரும் சில சர்வதேச செயற்பாட்டாளர்களும் விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்த முயற்சிக்கின்றனர்

### புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்



சிறிலங்கா அரசாங்கமும் சில சர்வதேச செயற்பாட்டாளர்களும் சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இக்காலப் பகுதியில் விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சிட்னி தமிழ் வானொலியான மண்ணின் மைந்தர்கள் வானொலிக்கு அவர் வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கருணா விவகாரத்திற்குப் பின் வன்முறைகள் அதிகரித்துள்ளன. சிறிலங்கா ஊடகங்கள் இதனை விடுதலைப்புலிகளின் குழுக்களுக்கிடையேயான மோதலாகச் சித்திரிக்கின்றன. இந்த வன்முறைகளின் பின்னணி பற்றிக் கருத்துக் கேட்ட போது அவர் தெரிவிக்கையில்,

நாம் எல்லா வன்முறைகளும் நிறுத்தப்பட வேண்டும் என்றே கேட்கிறோம் ஏனெனில் விடுதலைப் புலிகளின் தலைமை ஒருதலைப்பட்சமாகப் பகை உணர்வு நடவடிக்கைகளை நிறுத்தி அமைதிச் சூழலை உருவாக்கும் நடவடிக்கை (22 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை நிகழ்ச்சிநிரல் குறித்து இரு தரப்புடனும் கலந்துரையாடப்படும்!

### நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம்

(லண்டன்)

**விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையே தற்போது தேக்க நிலையில் இருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான நிகழ்ச்சி நிரலை ஏற்பாடு செய்வது குறித்து இருதரப்பினருடனும் கலந்துரையாடப் போவதாக நோர்வேயின் இலங்கைக்கான விசேடதூதுவர் எரிக்சூல்கெய்ம் தெரிவித்துள்ளார்.**

இன்று கொழும்பிற்கு வரவுள்ள இவர் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக்கூறியுள்ளார்.

இதேவேளை அண்மைக்காலமாக நடைபெறும் அரசியல் கொலைகள் குறித்தும், விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடாத்தும் தமிழ் பரா.இராணுவக் குழுக்களுடன் அரசிற்குள்ள தொடர்புகுறித்து நோர்வே கவலை கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர் தனது இந்த விஜயத் (22 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு 30மில்லியன் டொலர் நிதி உதவி வழங்க நோர்வே இணக்கம்

அடுத்த வருடம் சிறிலங்காவில் அபிவிருத்தி நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்காக முப்பது மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்க நோர்வே அரசு இணங்கியுள்ளது.

நோர்வே அரச பிரதிநிதிகளோடு அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்ததையடுத்து சிறிலங்காவுக்கு இந்த நிதியுதவி கிடைக்கவிருப்பதாக நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி. ஜயசுந்தர தெரிவித்தார். இதன்படி வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள், மீன்பிடி கைத்தொழில், பெருந்தோட்ட கைத்தொழில்துறை அடிப்படை வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நிதியுதவி வழங்க நோர்வே அரசு முன்வந்துள்ளது. நோர்வே அரசின் நிதியுதவியோடு ஏழு அமைச்சுக்கள் சம்பந்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு இரண்டு நாடுகளும் இணங்கியிருப்பதாக கலாநிதி ஜயசுந்தர தெரிவித்துள்ளார். வழமையாக நோர்வே (22 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியக் கடற்படைத் தளபதி நேற்று கொழும்பு வந்தடைந்தார்

இந்திய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் அருண்பிரகாஷ் நேற்றுக் கொழும்பு வந்தடைந்தார். நேற்று கட்டுநாயக்க வானூர்தி தளத்தில் வைத்து இலங்கையின் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி அவரை வரவேற்றார். ஐந்து தினங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இந்தியக் கடற்படை தளபதி சனாதிபதி, பிரதமர்,எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார். (22 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் பானு, கேணல் ரமேஸ் உட்பட தளபதிகள் மட்டக்களப்பு பயணம்!

கேணல் ரமேஸ், கேணல் பானு உட்பட தளபதிகள் மட்டக்களப்பிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

கடந்தவாரம் மட்டக்களப்பிலிருந்து வருகை தந்த கேணல் ரமேஸ் அவர்களும் அவரோடிணைந்து கேணல் பானு அவர்களும், தளபதி ராம், தளபதி ஜனார்த்தனன் தளபதி ஜெயாத்தன் ஆகியோரும் நேற்றுக் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்பிற்குப் (22 ஆம் பக்கம் பார்க்க)



## கொழும்பில் பாணுக்குத்தட்டுப்பாடு அத்தியாவசியப் பொருளாக அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பாண்தயாரிப்பு குறைவடைந்துள்ளதாகவும் இதனால் பாணுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிறிமா நிறுவனம் மாவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகம் செய்வதால் இவ்வாறு மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (22 ஆம் பக்கம் பார்க்க)

## புல்லுமலையை அண்மிய காட்டில் இருசடலங்கள் கண்டு பிடிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பதுளை வீதியிலுள்ள புல்லுமலையினை அண்மித்த காட்டுப் பகுதியில் சூட்டுக் காயங்களுடன் இரண்டு சடலங்கள் நேற்று மாலை பொலிசாரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொது மக்கள் கொடுத்த தகவலையடுத்து புதைகுழிகளிலிருந்து எடுக்கப்பட்ட இந்தச் சடலங்கள் இரண்டும் அடையாளம் காண முடியாத நிலையில் மகியங்கனை நீதவானின் உத்தரவின் பேரில் அடக்கம் செய்யப்பட்டன.

குறிப்பிட்ட இரண்டு சடலங்களும் கடந்த புதன்கிழமை இரவு விடுதலைப்புலிகளின் புல்லுமலை முன்னணி காவல் நிலையத்தின் மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்களுடையதாக (22 ஆம் பக்கம் பார்க்க)

## குழாய்க் கிணற்றிற்காக தோண்டிய குழியினுள் தொழிலாளி புதையுண்டார்

குழாய்க்கிணற்றிற்காகத் தோண்டப்பட்ட குழியினுள் தொழிலாளி ஒருவர் புதையுண்டுபோன சம்பவமொன்று நேற்று அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. அச்சுவேலி வல்லை வீதியிலுள்ள தனியார் வளவொன்றினுள்ளேயே இவ் அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.இவ்வாறு புதையுண்ட தொழிலாளியான புத்தூர் நவக்கிரிப் பகுதியைச் சேர்ந்த க. ஆனந்தன் (வயது 37) என்பவரின் சடலத்தை மீட்கும்பணி நேற்று நள்ளிரவு தாண்டியும் இடம்பெற்றது. ஆயினும் சடலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. (22 ஆம் பக்கம் பார்க்க)

# போராளிகளின் ஆக்கங்களைத் தாங்கிய இரு நூல்களுக்கு கிளி. இல் அறிமுகவிழா

(அலுவலக செய்தியாளர்)

போராளி ஆதித்தநிலாவின் "எங்கே மனக்கண்களைத் திறவுங்களேன்", அருமைகல்லூரிப் போராளிகளின்"முதற்பயணம்" சிறுகதைதொகுப்புகளின் அறிமுகவிழா நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது.

அருமைகல்விக் கூடப்பொறுப்பாளர் நாவலன் தலைமையில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில். பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன்.தியாகம்




ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை போராளி தமிழ்க்கவி ஏற்றிவைத்தார்.அடுத்து சிறப்புரையினை தமிழீழ மகளிர் பிரிவுஅரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழினி வழங்கினார்.

தொடர்ந்து "முதற்பயணம்" சிறுகதைத் தொகுப்பின் மதிப்பீட்டுரையினை இணுவையூர் சிதம்பர திருச் செந்தி நாதன் வழங்க பதிலுரையினை போராளி-படைப்பாளி அமுதன் வழங்கினார். அடுத்து "எங்கே மனக் கண்களைத்திறவுங்களேன்" சிறுகதைத் தொகுப்பிற்கு வெளிச்சம் ஆசிரியர் கருணாகரன் மதிப்பீட்டுரையினை வழங்க போராளி ஆதித்தநிலா பதிலுரையினை வழங்கினார்.

நன்றியுரையைத் தொடர்ந்து புதுவை அன்பனின் நெறியாள்கையில் அருமைகல்லூரி போராளிகளின் "எம் தேசத்துக்காய் எங்கெங்கும்" எனும் நாடகமும், புதுவை அன்பனின் நெறியாள்கையில் விடுதலைப்பறவை கலைஞர்களின் "கரைதேடும் ஓடங்கள்" எனும் நாடகமும் இடம்பெற்றன. பொதுமக்கள், போராளிகள், கலைஞர்கள், மாணவர்கள் இந் நிகழ்வில் பெருமளவில் கலந்து கொண்டமையும், அறிவமுது பொத்தக சாலையின் ஒழுங்கமைப்பில் மேற்படி அறிமுகநிகழ்வு இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (சோ)

## வரிவிளம்பரம

### சிங்கள வகுப்புக்கள்

புதியபிரிவுகள் ஆரம்பம்,பிரிவு I,செவ்வாய்,புதன், வியாழன், மாலை.5.30-6.30 வரை, ஆரம்பம்:- 15.09.2004. பிரிவு II- சனி, ஞாயிறு தினங்களில் மாலை 4.00- 6.00 மணிவரை. ஆரம்பம்:- 18.09.2004 பெயர்களைப் பதிவு செய்யவும். பி.எஸ்.ரி. தொழில்நுட்பம் கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. (5045)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன்செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி கிளிநொச்சி. T.P.021-2285750. (சி.10350)

# தியாகி திலீபன் மருத்துவ சேவையால் கிழக்கில் விசேட மருத்துவ முகாம்

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையினரால் கிழக்கு மாகாணத்தில் விசேட மருத்துவ முகாம் அமைக்கப்பெற்று சிகிச் சைகள் மேற்கொள்ளப்பெற்றுள் ளன.கடந்த 8ஆம் திகதியன்று மூதூர் பிரதேச சேனையூர் மத்திய கல்லூயில் நடைபெற்ற விசேட மருத்துவமுகாமில் பொது மருத்துவம், இருதய சிகிச்சை, கண்மருத்துவம் உட்பட 240 பேருக்கு சிகிச்சைகள் மேற் கொள்ளப்பெற்றதுடன், 9ஆம் திகதி மட்டக்களப்பு கதிரவெளி தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையத்தில் வைத்து 360 பேருக்கு பொது மருத்துவம், இருதய சிகிச்சை என்பன மேற் கொள்ளப்பெற்றன.

இரு தினங்களிலும் விசேட மருத்துவ முகாம் சிகிச்சை மூலம் சேனையூர், மற்றும் கதிரவெளி யைச் சேர்ந்த 600 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (சோ.கு)

# மழலைகள் கணினிப் பூங்கா கிளிநொச்சியில் விரைவில் ஆரம்பம்

தமிழீழ மாணவர் அமைப்பும், தமிழ் தகவல்தொழில்நுட்ப ஒழுங்க மைப்பும் இணைந்து நடாத்தும் லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் இலவச மழலைகள் கணினிப் பூங்கா வெகுவிரைவில் கிளி நொச்சி பரவிப்பாஞ்சானில் ஆரம் பிக்கப்படவுள்ளது.

விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் தமிழீழ மாணவர் அமைப்பு நடுவப் பணி மனையில் பெற்றுக்கொள்ளலாம், மேற்படி கணினிப்பயிற்சிக்கு தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை கல்வி கற்கும் மாணவர்கள் விண் ணப்பிக்கலாம்,விண்ணபமுடி வுத்திகதி எதிர்வரும் 20 ஆம் திகதி யாகும். இதற்கு விண்ணப்பித் தவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் மாலை 3.00-5.00 மணிவரை நடை பெறும்.

# தியாக தீபம் திலீபன் நினைவாக மல்லாவியில் சிரமதானம்

தியாகதீபம் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மல்லாவி வண்ணன் விளையாட்டுக் கழகத்தின் வீதிகள் வியாழக்கிழமை சிரமதானம் செய்யப்பட்டன.

இப்பணி மல்லாவி நகர் கமக்கார அமைப்பினரின் அனுசரனையுடன் மேற்கொள்ளப்பட்டது. (21)

# வவுனியாவில் கடும்வரட்சியால் பெருமளவு விவசாயிகள் பாதிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 21 ஆயிரத்து 10 ஹெக்டெயர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யப்பட்டு வருவ தாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கப் படுகிறது. இதில் பெரும் போகமாக 5 ஆயிரத்து 579 ஹெக்டெயரிலும், சிறுபோகமாக 10ஆயிரத்து,803 ஹெக்டெயரிலும் மானாவாரியாக 4ஆயிரத்து 628 ஹெக்டெயரிலும் விவசாயம் செய்யப்படுகிறது. இந்த தொழிலை நம்பி வவுனியா மாவட் டத்தில் 26 ஆயிரத்து 274 விவசாய குடும்பங்கள் வாழ்ந்து வருகின் றனர். இந்த விவசாயிகளில் பெரும் பாலானவர்கள் தற்போது நிலவும் வரட்சிகாரணமாக பெருமளவாக பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்டதக்கது. (21)

## கிளிநொச்சி மாவட்டத்தில் விசேட வாகனங்கள் மூலமும் ருபெல்லா தடுப்பூசி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினமும் நேற்றும் சின்னமுத்து, ருபெல்லா தடுப்பு ஊசி மருந்து வழங்கும் நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 16 வயது முதல் 21 வயதிற்குட்பட்ட



இளைஞர் யுவதிகளுக்கு இரு நாட்களும் தினமும் காலை 7.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை பாடசாலைகள் மற்றும் குறிப்பிட்ட நிலையங்களில் வைத்து தடுப்பூசி மருந்துவழங்கப்பட்டதுடன் தடுப்பூசி மருந்து பெற்றுக்கொண்டதற்கான அட்டைகளும் வழங்கப்பெற்றது. தமிழீழசுகாதார சேவையினர்மற்றும் சுகாதார திணைக்களத்தினர் கூட்டாக மற்றும் விசேடவாகனம் மூலம் வீதிகளில் தடுப்பூசி மருந்து ஏற்றத்தவறி சென்றவர்களை அடையாளங்கண்டு அவ்விடத்திலேயே தடுப்பூசி மருந்தினை வழங்கியமையையும் காணக்கூடியதாகவிருந்தது. (சோ)

### கண்டெடுப்பு

(அலுவல செய்தியாளர்)

தர்மலிங்கம் ஜெயந்தன் புதுக்காடு இராமநாதபுரம் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை இல. 85353068V மற்றும் நிரந்தர பயணஅனுமதி அட்டை ஆகிய வற்றுடன் (பேர்ஸ்) ஒன்று கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி காவல்பணிமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

உரியவர் நேரில் வருகை தந்துபெற்றுக்கொள்ளும் வண்ணம் காவல்பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (சோ,கு)

# சமாதானத்தை வளம் பெறச்செய்தல் எனும் தலைப்பில் செயலமர்வு

மன்னாரில் வாழ்வோதய கேட்போர் கூடத்தில் மக்கள் மத்தி யில் சமாதானத்தை வளம்பெறச் செய்தல் என்ற தலைப்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஓர் செயலமர்வு இடம்பெற்றது. இதற்கு மன்னார் வாழ்வோதய இயக்குனர் அருட் தந்தை அவர்கள் தலைமை தாங் கினார்.இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் நகரபிரதேச செயலாளர் சமாதா னத்திற்காக செய்யும்பணி மகத் தான தெனவும்செய்யும் அனை வரும்சமாதானம் நிலைக்க முயற்சிஎடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார். இதில் அரசு, அரச சார்பற்ற பிரதிநிதிகள், பாடசாலை அதிபர் உப்படபலர் கலந்து கொண் டனா. (மி)

## வீதி சீரில்லை

மன்னார்,முருங்கன் நானாட் டான் ஊடாக வங்காலைக்கு செல்லும் வீதி பொதுமக்களின் நாளாந்த பயன்பாட்டிற்கு முக்கிய மான தொரு வீதியாகும். இவ் வீதி போர்க்காலத்துக்கு முன்னர் முழு மையாகப்போடப்பட்டது. ஆனால் தற்பொழுது திருத்த வேலைகள் செய்த போதிலும் இவ்வீதி நல்ல நிலையில் இல்லாது குன்றும் குழி யுமாகவுள்ளது. இதனை இப்பகுதி மக்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவித்த போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில் லையென இப்பகுதிமக்கள் விசனம்தெரிவித்துள்ளனர்.

# கிளி.தொழில் நுட்பக்கல்லூரியில் மேலதிக பயிற்சி வழங்க நடவடிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தினரால் நடாத்தப்பெற்ற மரவேலை மற்றும் மேசன் போன்ற6மாதகால பயிற்சி நெறியினை கற்று வெளியேறியவர் களுக்கு மேலும்மேலதிக பயிற் சிகள் வழங்கப்பெற நடவடிக்கை மேற கொள்ளப்பெற்றுள்ளது.

மேலும் நாலு மாதங்கள் (சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்) நடை பெறவுள்ள மேற்படி பயிற் சிக்கு ஊக்குவிப்பாக நாளொன்றிற்கு 350 ரூபாவீதம் வேதனம் வழங்கப் படவுள்ளதுடன் பயிற்சி முடிவில் உயர்தகைமைச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலதிக பயிற்சிக்கான பதிவி னைமேற்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 2.00மணிக்கு கிளிநொச்சி தொழில் நுட்பகல்வி நிறுவனத்திற்கு தவ றாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி.மாவட்டதொழில்நுட்பநிறுவன முதல்வர் திபிரபாகரன் வேண்டியுள் ளார். (சோ.கு)

## புதுக்குடியிருப்பு காவல்பணிமனையினால் வீதிப் போக்குவரத்து முறை குறித்து காவல்துறையினர் விளக்கமளிப்பு

புதுக்குடியிருப்பு காவல்பணிமனையினர் வீதியில் ஈருருளியில் சமனாகக்கதைத்துக்கொண்டு செல்பவர்களையும் உந்துருளியில் மூன்று பேரை ஏற்றி அழைத்துச்செல்பவர்களையும் அழைத்து இதனால் ஏற்படும் விபரீதங்கள் குறித்து விளக்கமளித்து வருவதுடன் தொடர்ந்தும் இவ்வாறு செல்லவேண்டாமென எச்சரித்துமுள்ளனர்.

# வட்டக்கச்சி காவல்துறையினரின் குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி பிரதேசகாவல்துறையினரால் குற்றத்தடுப்பு நடவடிக் கையின் ஓர் அங்கமாக கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை மேலும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. இராமநாதபுரம் பகுதியில் அண்மையில் விற்பனை செய்வதற்கென வைக்கப்பட்டிருந்த 2லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்படி சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாக வட்டக்கச்சி காவல் பணிமனைப் பொறுப்பாளர் சுந்தரலிங்கன் தெரிவித்துள்ளார். (15,12)

# பாக்தாத்தில் தொடர் கார்க்குண்டு வெடிப்பு
# 22 பேர் பலி; 45இற்கு மேல் படுகாயம்

(பாக்தாத்)

**ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற தொடர்கார்க் குண்டு வெடிப்புக்கள் மற்றும் துப்பாக்கித் தாக்குதலினால் இருபத்தியிரண்டு பேர் கொல்லப்பட்டதுடன் நாற்பத்தைந்து பேர் காயமடைந்துள்ளனர்.**

இந்தத் தொடர்கார்க் குண்டு வெடிப்புத் தாக்குதல்களில்



நோட்டமிடும் அமெரிக்க உலங்கு வானூர்தி.



தீப்பிடித்து எரியும் அமெரிக்க கவச வாகனம்.

பாக்தாத்தின் மத்திய பகுதியிலுள்ள ஹைபா பகுதியில் இடம் பெற்ற தாக்குதலின்போது அமெரிக்க இராணுவ வாகனம் ஒன்றும் தீப்பிடித்தெரிந்தது.

இந்தப்புகை ஈராக்கின் இடைக்கால நிர்வாக அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களின் இல்லங்கள் அமைந்துள்ள கிறீன் சோன்பகுதிகளுக்கு மேலாக எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஹைபா வீதியில் கார்க்குண்டொன்று வெடித்ததாகக் கூறப்படும் சம்பவத்தையடுத்து இடம்பெற்ற துப்பாக்கிச்சமர் சுமார் மூன்றுமணி நேரம்வரை நடைபெற்றுள்ளது.

இதனால் ஆத்திரமுற்ற மக்கள் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்த அமெரிக்க கவச வாகனத்தின் மீது கற்களை எறிந்து தமது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டதுடன் நடனமாடியதாகவும் இதன்போது அமெரிக்க ஹெலி கொப்டர்கள் அப் பகுதிக்கு மேலா கப் பறந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் அதே வேளை, இத்தாக்குதலின் போது அமெரிக்கத் துருப்பினருக்கு ஏற்பட்ட சேத விபரம் எதுவும் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



பாக்தாத்தில் அமெரிக்கப்படைகளுக்கும் ஈராக்கிய தீவிரவாதிகளுக்குமிடையில் நடைபெற்ற சண்டையின் போது எரியும் தனது இராணுவ வண்டியை கைவிட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறும் அமெரிக்கப்படையினர் .

# ஈராக்கில் கைதிகள் சித்திரவதை அமெரிக்க வீரருக்கு 8மாதம் சிறை

(பாக்தாத்)

ஈராக்கில் அபுகிராய்ப் சிறையில் ஈராக்கியர்கள் சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பாக அமெரிக்க இராணுவவீரருக்கு 8மாதம் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் நடத்தை சரியில்லாமைக்காக அவர் இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளார். பாக்தாத்திலுள்ள அமெரிக்க சிறப்பு நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை சனிக்கிழமை அளித்துள்ளது. தண்டனை பெற்றுள்ள ஜே.குரூஸ் (வயது24) டெக்சாஸைச் சேர்ந்தவர். 502 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்தவர். ஈராக்கிய கைதிகளை நிர்வாணப்படுத்துமாறு அமெரிக்க வீரர்களுக்குத் தான் உத்தரவிட்டதை விசாரணையின்போது ஒப்புக்கொண்டார் குரூஸ். மேலும் கைதிகளின் கைகளை விலங்குகளால் பூட்டி அவர்களது பாலுறுப்புகள் தரையில் படுமாறு தவழ்ந்து செல்ல வைத்ததையும் ஒப்புக்கொண்டார் குரூஸ். கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டதை மறைக்க இராணுவ பொலிசாருடன் சேர்ந்து சதி செய்ததையும் ஒப்புக்கொண்டார். “அவர் எந்தச் சிறையில் அடைக்கப்படுவார் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை” என இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். மூன்றாண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தப்பட்ட தினத்திலேயே (செப்-11) இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



கடந்த வாரம் வடகொரியாவில் ஏற்பட்ட ரயில் குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட வீடுகள் (கடந்த ஏப்பிரல் மாதம் நடத்தப்பட்ட தாக்குதலைவிட பலமான தாக்குதல் என கூறப்படுகிறது)

# அமெரிக்க இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டமைக்கு விமான நிறுவனங்களின் கவனக்குறைவே காரணம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டமைக்கு, விமான நிறுவனங்களின் கவனக் குறைவினால் தான் இந்த விபரீதம் ஏற்பட்டதாகக் கூறி அவர்கள் மீது இரட்டைக்கோபுர காப்பீட்டாளர்கள் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அமெரிக்க விமான நிறுவனங்களான அமெரிக்கன் ஏர்லைன்ஸ், இரட்டை ஏர்லைன்ஸ் உட்பட பல நிறுவனங்கள்மீது தற்போது உலக வர்த்தகக் காப்பீட்டாளர்கள் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்த விமானநிறுவனங்களின் கவனக்குறைவினால் தான் தீவிரவாதிகள் பாதுகாப்பு வலயங்களைக் கடந்து விமானங்களை மோதித் தகர்த்துள்ளனர் என்று அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது,

# ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் போர் எதிர்ப்புப் பேரணி

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் போர் எதிர்ப்புப் பேரணி நடைபெற்றுள்ளது. ஆயிரக்கணக்கானவர்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டு அமெரிக்காவுக்கு எதிராகவும், அமெரிக்காவுக்கு ஆதரவாக ஈராக்கிற்கு படை அனுப்பிய ஜப்பான் அரசுக்கு எதிராகவும் ஊர்வலத்தினர் கோஷம் எழுப்பினார்கள்.

ஜோர்ஜ் புஷ் மற்றும் ஜப்பான் பிரதமர் கொய்பூமி ஆகியோரின் முகமூடிகளையும் அவர்கள் அணிந்து வந்தனர். நியூயோர்க் உலக வர்த்தக மையம் தீவிரவாதிகளால் இடிக்கப்பட்ட 3ஆம் ஆண்டு தினத்தில்தான் இந்தப் போர் எதிர்ப்பு பேரணி நடந்தது. ஜெர்மனியில் அதிபர் ஜெரால்டு ஷிரோர்டர் கலந்து கொண்ட சோஷியல் சனநாயகக்கட்சிக் கூட்டம் நடந்தது. இந்தக் கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிலர் போராட்டம் நடத்தினார்கள். போராட்டத்தின் போது அந்தக் கட்சித் தலைவர்களை நோக்கி போராட்டக்காரர்களில் ஒருவர் தக்காளியை வீசினார். ஒரு தலைவரின் முகத்தில் அழுகிய தக்காளி விழுந்தது. தக்காளி வீசிய அந்த போராட்டக்காரர் மீது கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தக்காளிவீசியவருக்கு என்ன தண்டனை வழங்குவது என்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

## குண்டு வெடிப்பு

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று அதிகாலை அமெரிக்க மற்றும ஏனைய நாடுகளினது தூதரகங்களின் முன்பு, குண்டு வெடித்துள்ளது. குண்டுவெடிப்பால் பல வாகனங்கள் தீப்பிடித்துள்ளன பெரும் புகை மூட்டமாக அந்த இடம் காணப்பட்டதாக கூறப்படுகின்றது..

# பயங்கரவாதத்தை எதிர்த்து தளராத போர்- புஷ் சுதந்திரத்துக்கே இறுதி வெற்றி- ஜோன்ஹெரி

(வோஷிங்டன்)

பயங்கரவாதத்தை எதிர்த்து தளராமல் போர் புரிவோம் என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தை வீழ்த்தி சுதந்திரமே இறுதி வெற்றி பெறும் என சனாதிபதித் தேர்தலில் புஷ்ஷை எதிர்த்து ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் ஜோன் ஹெரி கூறியுள்ளார். 2001 செப்.11-இல் அமெரிக்காவின் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதன் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. அத்தாக்குதலில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் நினைவாக பிரார்த்தனைகள் நடைபெற்றன. நாடு முழுவதும் ஒரு நிமிஷம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நினைவு தினத்தை முன்னிட்டு அமெரிக்க அதிபர் புஷ் வானொலியில் பேசியபோது; பயங்கரவாதிகள் எங்கே பயிற்சி பெற்ற போதிலும், எங்கே ஓய்வெடுத்த போதிலும், எங்கே காலூன்ற முயன்ற போதிலும் அங்கேயே தேடிச் சென்று போரிடுவோம். அமெரிக்காவுக்கு இன்னும் ஆபத்து இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறோம். எமது மக்களைக் கொல்வதற்குத் திட்டம் தீட்டிய பயங்கரவாதிகளைத் தேடிக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும் வரை நாங்கள் ஓயப் போவதில்லை என்றார். சனதிபதித் தேர்தலில் சனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் ஜோன் ஹெரி பாஸ்டன் நகரில் நடைபெற்ற நினைவு தினக் கூட்டத்தில் பேசியபோது, அமெரிக்கர்கள் மன உறுதி படைத்தவர்கள். பயங்கரவாதிகளை வீழ்த்திச் சுதந்திரம் இறுதி வெற்றி பெறும என்பதை இந்த மனஉறுதி நிரூபிக்கும் என்றார்.

# மலேசியாவில் மீண்டும் பறவைக் காய்ச்சல் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

(கோலாலம்பூர்)

மலேசியாவில் மீண்டும் பறவைக காய்ச்சல் பரவுவது கண்டறியப்பட்டுள்ளது. அப்பகுதி மூன்றுவார காலமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இந்நோயைக் கட்டுப்படுத்த தற்போது பலவித முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. விலங்குகள், மனிதர்களிடத்தில் நோய் இருக்கிறதா என்பதைக் கண்டறிய பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சுகாதாரத்துறை அமைச்சக அதிகாரிகள் கூறுகையில், “காய்ச்சலுக்காக ஒரு கால்நடை பணியாளர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவரைத் தனிமையில் வைத்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன” என்றார். கால்நடைத் துறைத் தலைவர் ஹவாரி ஹுசேன் கூறுகையில், “மூன்று கிராமங்களில் 12கோழிகளும் வாத்துகளும் ‘ப்ளு வைரஸால இறந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது” என்றார். இதன்மூலம் தீவிர ஒழிப்பு நடவடிக்கைகளையும் மீறித் தாக்குப்பிடித்து நிற்கும் திறன் வைரசுக்கு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த ஓகஸ்ட் 17இல் தாய்லாந்திலிருந்து கடத்தி வரப்பட்ட கோழிகளிடத்தில் இந்நோய் இருப்பது கண்டறியப்பட்டது. அதன் பின் தீவிர ஒழிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நோயால் முன்பு வியட்நாமிலும், தாய்லாந்திலும் 28பேர் இறந்தனர். “இதுவரை மனிதர்களுக்கு இந்நோய் பரவியது குறித்து தகவல் இல்லை.



பாக்தாத்தில் பொலிஸ் நிலைய தாக்குதலில் கொல்லப்பட்ட ஒருவரின் உடலை தூக்கிச் செல்லும் ஈராக்கிய பொலிசார்.



பாக்தாத்தில் எரியும் அமெரிக்கப்படையினரது வாகனத்தின் மீது கல் எறியும் சிறுவன்.

# எமது தாயக பொருண்மிய மேம்பாட்டில் கூட்டுறவாளர் பணி மேலும் உயரவேண்டும்

**-பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன்.**


(அலுவலக செய்தியாளர்)

**எமது தாயகம் விடிகின்றபோது தமிழர்கள் நிலமெங்கணும் வளம் நிறைந்த பொருண்மியத்தின் மேம்பாடு சிறந்து விளங்கும் காட்சியை நாம் காணவேண்டும். அதில் கூட்டுறவாளர்களின் பங்கு உயர்ந்து காணப் படுவது எமக்கு பெருமையைத்தரும்.**

இவ்வாறு கிளிநொச்சி செல்வா நகரில் அண்மையில் கிளி.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தினால் புதிதாக அமைக்கப் பெற்று திறந்துவைக்கப்பெற்ற பாரிய அரிசி ஆலைக்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் தனது வாழ்த்துச் செய்தியினைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது வாழ்த்துச் செய்தியில் எமது தேசவிடிவிற்காக உழைக்கும் இவ்வேளையில் தமிழ் பேசும் மக்களின் தேவைகளையும் தன்னிறைவடையச் செய்வதற்காக உழைப் போம் அதுவே முழுமையான சுதந் திரமான தேசவிடுதலைக்கு வழி செய்யும்.

இத் திறப்பு விழா சிறப்புடன் நடைபெறுவதுடன் ஆரம்பிக்கும் அரிசி ஆலை ஆலம் விருட்சம் போல வளர்ந்து அறுகு போல வேரூன்றி கற்பக தருபோல கால மெலாம் மக்களுக்கு பயன் வழங்க வேண்டுமென வாழ்த்தி இவ் ஆலையில் நிர்மாணத்திற்காக உழைத்த அனைவருக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்தினைத் தெரியப்படுத்துகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். மேற்படி புதிய அரிசி ஆலையினை கிளி/அரச அதிபர் தி.இராசநாயகம் வைபவரீதியாக திறந்துவைத் தமை குறிப்பிடத்தக்கது.(சோ,கு)



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பலவருடங்களுக்குப்பின்பு வைத்திய நிபுணரால் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. தற்போது மாவட்ட வைத்தியசாலையில் காது, மூக்கு,தொண்டைக்கான நோய்களுக்கு வெளிநாட்டிலிருந்து வருகை தந்துள்ள வைத்திய நிபுணர் டாக்டர் றொபேட் எ.பெஞ்சமின் சிகிச்சை மேற்கொள்வதனைப் படத்தில் காணலாம். (சோ.கு)

# திருமலை பொது வைத்தியசாலை பெயரளவில் மட்டுமே தரமுயர்வு

**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கவலை**

திருகோணமலை அரசாங்க பொது வைத்தியசாலை பெயரள வில் தான் தரமுயர்த்துப்பட்டுள்ளது. ஆனால் பொதுவைத்தியசாலைக் குரிய வசதிகள் இன்னும் வழங் கப்படவில்லை என்று வடக்கு-கிழக்கு மாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வி.குமாரவேற் பிள்ளை யுனிசெப்பினால் புனர மைக்கப்பட்ட திருகோணமலை பொதுவைத்தியசாலையின் மகப்பேற்று நிலையத்திறப்பு விழா நிகழ்வில் பங்குபற்றி பேசும் போது தெரிவித்தார்.

யுனிசெப்பினால் எட்டரை இலட் சம் ரூபாய் செலவில் புனரமைக் கப்பட்ட மகப்பேற்று நிலை யத்தை யுனிசெப் தெற்காசியப் பிராந்திய திட்டமிடல் அதிகாரி டாக்டர் அசோக்நிகாம் திறந்து வைத்தார். இந் நிகழ்வில் யுனி செப்பின் இலங்கைக்கான முன்பள்ளிக் கல்வி அபிவிருத்திப் பிரிவு தலைமை அதிகாரி டாக்டர் அபெரா பெக்கலி, யுனிசெப்பின் ஒருங்கிணைப்பாளர் டாக்ர் திருமதி. யஸ்மின்அலிஹேக, யுனிசெப் திருமலைத் தலைமை அதிகாரி செல்வி கபிரியெலா எல்றோஸ், திருமலை பொதுவைத் தியசாலை அத்தியட்சகர் டாக்டர் திருமதி.கௌசி ஞானகுணாளன், மாகாண சுகாதார அமைச்சின் தாய்-சேய் நலவைத்திய அதிகாரி டாக்டர் இ.ஜி. ஞான குணாளன் ஆகியோரும் பங்கு பற்றினர். முதலில் டாக்டர் அசோக் நிகாம் மகப்பேற்று விடுதியின் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். புனரமைக்கப் பட்ட மகப்பேற்று விடுதியில் 22 புதிய படுக்கைகள் வழங்கப்பட் டுள்ளன. அடிப்படைத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டுள் ளன. மகப்பேற்று விடுதிப் பணி யாளர்களுக்கு கொழும்பு காசில் வீதி வைத்தியசாலையில் பயிற் சியும் வழங்கப்பட்டன. இந்நிகழ் வின் போது குச்சவெளி, கந்தளாய், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு 375,000 ரூபாய் செலவில் மூன்று கணினிகள், பிரிண்டர் மற்றும சாதனங்களும் யுனிசெப் அமைப்பினால் வழங்கப் பட்டன. (25)

# புதுக்குடியிருப்பு பி.செ.பிரிவில் இரண்டு வீதிகள் திருத்தம்

(புதுக்குடியிருப்பு)


புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் இரண்டு வீதிகள் தார் மூலம் செப்பனிடப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் செ.தயானந்தா தெரிவித்தார்.புதுக்குடியிருப்பு வைத் தியசாலைக்கு முன்பாக உள்ள வீதி 36 இலட்சம் ரூபாய் செலவில் செப்பனிடப்பட்டுள்ளதாகவும், இவ்வீதிக்கு தடுப்புச்சுவர் பாலம் தார் மூலம் வீதி செப்பனிடப்பட்டமைக்காக மேற்படி தொகை செலவு செய்யப்பட்டதாகவும் மேலும் புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியிலுள்ள துர்க்கா வீதி 17 இலட்சம் ரூபா செலவில் செப்பனிடப்பட்டதாகவும் பிரதேச செயலர் செ.தயானந்தா கூறியுள்ளார்.

# தொலைபேசி இணைப்புக்களை வழங்க நடவழக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கு வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. மேற்படி விடயம் குறித்து கிளி.மாவட்ட மேலதிக அரசஅதிபர் தெரிவிக்கையில்;கிளிநொச்சி மாவட்டத்தில் தொலைபேசி இணைப்பு தேவைப்படுபவர்கள் தங்கள் பகுதி கிராமசேவை அலுவலகர்களுடன் தொடர்பு கொண்டு பெயர்,முகவரி, தேவைப்படும் தொலைபேசி எண்ணிக் கையின் விபரங்கள் யாவற்றையும் கடிதத்தில் குறிப்பிட்டு சமர்ப்பிக் கும்படி கேட்டுக்கொண்டுள்ளார் (சோ,கு)

# இராணுவ ஆக்கிரமிப்பால் சிதைக்கப்பட்ட மாசார் கிராமத்தின் அவலம்....?



பாடசாலைக் கொட்டகை


சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பினால் இடப் பெயர் வைச் சந்தித்து மீளக் குடியேறிவரும் கிராமங்களில் ஒன்றான பளை மாசார் கிராமத்தில் அமைந்துள்ள மாசார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை எந்தவொரு அடிப்படை வசதிகளுமற்ற நிலையிலே இயங்கிவருகின்றது.

மீள் குடியமர்வுச் செயற்பாடுகள் துரித கதியில் நடை பெற்றுவரும் இக்கிராமத்தில் ஏறத்தாழ மூன்று வருடங் களுக்கு முன்னரே மக்கள் மீள் குடியேற ஆரம்பித்து விட்டனர். ஆனால் 2002ஆம் ஆண்டு இப்பாடசாலை புனர மைக்கப்பட்டது. சிறிலங்கா இராணுவத்தினரின் விமானக் குண்டு வீச்சுக்களாலும், எறிகணை வீச்சுக்களாலும் நிரந் தரக்கட்டடங்கள் அனைத்தும் இடிந்து தரைமட்டமாக்கப் பட்டது. மீளக் குடியமர்வின் போது ஒரு தற்காலிகக் கொட்டகை மட்டும் அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்டு இரண்டு வருடகாலத்தை கடந்திருக்கும் நிலையில் இதன் கூரைக்கிடுகுகள் அனைத்தும் காற்றுக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளதோடு, நிலமும் புழுதியாகவே காணப்படுகின்றது.

அத்தோடு இப்பாடசாலை அதிபரின் அலுவலகமும் மிகவும் மோசமான உடைவுகளுக்குள்ளாகி காணப்படு கின்றது. அத்தோடு மழைக்காலத்தில் இங்கு கற்கும் மாணவர் களின் கற்றல் செயற்பாடுகள் கேள்விக்குறியான தொன் றாகவே உள்ளது. தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களில் 325 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட இந்த பாடசாலையில் ஒரேயொரு தற்காலிகக் கட்டடமாக உள்ள இக் கட்டடம் கூட மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. இதேவேளை ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்களுக்கென வகுப்பறை வசதிகள் கூட இல்லாததால் அவர்களின் கற்றல், கற்பித்தல் செயற் பாடுகள் மந்தகதியிலேயே உள்ளதாகவும், தற்கால கல்வி சீர்திருத்திற்கமைவான கல்விச் செயற்பாடுகள் எதனையும் மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் அப்பகுதி கல்விச் சமூகத்தினர் பெரும்கவலை தெரிவிக்கின்றனர். அத்தோடு இங்கு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்எதுவுமே இல்லை.விளையாட்டு உபகரணங் களோ, விளையாட்டு மைதானமோ இல்லாத நிலையில் மாண வர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவற்றைவிட மல சலக்கூடங்களின் வசதியும் மிகக்குறை வாகவே உள்ளது. இவ்வாறாக பல அடிப்படை வசதிகள் கூட முற்றாக இல்லாதால் இங்கு கற்கும் மாணவர்கள் கல்வி நிலையில் மிக மோசமான பின்னடைவையே எதிர் கொண்டு வருகின்றனர். இதனால் மிகவும் பின்தங்கிக் காணப் படும் இக்கிராமம் மேலும் பின்தங்கிச் செல்லும் அபாய நிலை தோன்றியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கும் இதேவேளை, இது தொடர்பாக எந்தவொரு அரச திணைக்களங்களோ, துறைசார் திணைக்களங்களோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ அக்கறை கொள்ளாதுள்ள



வீதியோர மரநிழலில் பொதுச் சந்தை



சிதைக்கப்பட்ட நிரந்தரப் பாடசாலையின் கட்டடம்

தாகவும் மீள்குடியமர்வு பிரதேசமாகையால் மக்கள் பெரும் வறுமையை எதிர்நோக்கியுள்ளதால் மீண்டும் இதனைப் புனரமைக்க தம்மால் முடியாதுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இப்பகுதி மக்கள் மிகவும் பின்தங்கிய பகுதி யாதலாலேயே அரச திணைக்களங்கள் அக்கறை காட்டா துள்ளனரென அப்பகுதிக் கல்விச் சமூகத்தினர் விசனம்தெரிவிக் கின்றனர்.

மேலும் மீள் குடியமர்விற் குள்ளாகி ஏறத்தாழ நான்கு வருடகாலத்தை எட்டியுள்ள போதும், மீள் குடிய மர்வுக்கான கொடுப்பனவாக 25000 ரூபாய் மட்டும் வழங் கிய நிலையில் எதுவித புனரமைப்பையுமே இது வரை மேற்கொள்ள வில்லை. அத்தோடு இப்பகுதி மக்களின் பிரதான தொழில் விவசாயமாகவே உள்ள நிலையில் இராணுவ காவலரண்கள், தடுப்பு அணைகள் என்ப வற்றினால் உவர்நீர் கிராமத்தினுள் புகுந்து நிலத்தை உவர்த் தன்மையாக மாற்றி விட்டதால் விவசாயச் செய்கையினை மேற்கொள்ள முடியாதுள்ளனர். அத்தோடு சிறிய சந்தை வசதிகள் கூட இல்லாமல் வீதியோரங்களில் காணப்படும் மரநிழலில் பொருட்களை வைத்து விற்பனை செய்து வருகின்றனர். இதனால் வீதிபோக்குவரத்தில் பெரும் சிரமமும் எதிர்நோக்கப்படுகிறது.

எனவே இப்பகுதி மாணவர்கள் பாடசாலையின் அபி விருத்தியை எதிர்பார்த்திருக்கும் இதேவேளை இப்பகுதி மக்களும் தமது கிராமமும் அபிவிருத்தியடைய வேண்டு மென்பதையும் இச்செயற்பாடுகளுக்கு எந்த வழியிலாவது உதவிகள் கிடைக்குமா என எதிர்பார்த்து காத்திருக் கின்றனர்.

**இ.சசிக்குமார்**




நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஆலய வீதியில் "புலிகளின் குரல்" நிறுவனம் நடாத்தும் கேணல் கிட்டு, லெப் கேணல் திலீபன் நினைவு சிறப்பு முத்தமிழ் கலையரங்கம் நேற்று முன் தினம் மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகியது. இக் கலையரங்க நிகழ்வில் விடுதலைப்புலிகளின் மகளிர் கலை பண்பாட்டுக்கழக கலைஞர்களின் புரட்சிப் பாடலுக்கான நாட்டிய நிகழ்வினை படங்களில் காணலாம். இக் கலையரங்கம் எதிர்வரும் 15ஆம் திகதிவரை ஒவ்வொரு நாளும் மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (படங்கள்-செல்வா)

# கடமை நேரத்தை மறந்துவிடும் சித்த ஆயுர்வேத மருத்துவர்கள்

## –நோயாளர் பிரதேச சபையில் முறைப்பாடு

மிருசுவிலில் உள்ள ஆயுர்வேத சித்த வைத்திய நிலையத்தின் மருத்துவர்கள், ஊழியர்கள் கடமை நேரம் தவறி மருத்துவமனை வருவதுடன், குறித்த நேரத்திற்கு முன்னமே மருத்துவமனையைப் பூட்டி விட்டு செல்வதால் இப்பகுதியில் இருந்தும், சுற்றுப்புற பகுதியிலிருந்தும் வரும் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருப்பதுடன் சில வேளைகளில் சிகிச்சை பெறாமல் செல்வதாகவும் தெரியவருகிறது. இது குறித்து பாதிக்கப்பட்ட நோயாளர்கள் கொடிகாமம் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு சென்றிருப்பதாக தெரியவருகிறது. (28)

# கடற்படைச்சிப்பாய் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் காரைநகர் சிறிலங்கா கடற்படைத்தளத்தில் கடற்படைச்சிப்பாய் ஒருவர் சகாவால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் வெள்ளி இரவு இடம்பெற்றது. தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்ட சிப்பாயின் சடலம் கொழும்புக்கு நேற்றுமுன்தினம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அதேநேரம் துப்பாக்கிச் சூட்டை நடத்திய சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

# தாயகம் திரும்பியோருக்கு நெடுந்தீவில் நடமாடும்சேவை

(வடமராட்சி)

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களிற்கான உதவிகளை வழங்குதல் மற்றும் பிறப்பு,இறப்பு, திருமணப்பதிவுகளை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவை நிகழ்வொன்று கடந்த புதனன்று நெடுந்தீவுப் பகுதியில் நடாத்தப்பட்டுள்ளது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவித்திட்டம் இந்நடமாடும் சேவைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனப்பிரதிநிதிகளுடன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிகள், யாழ்.மாவட்ட பதிவாளர், அலுவலக பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு அலுவலகப் பிரதிநிதிகளும் நெடுந்தீவிற்கு விஜயம் செய்திருந்தனர். இச்சேவையில் முன்நூறிற்கும் அதிகமான பொதுமக்கள் பயனடைந்திருந்ததாக ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

# "கொட்டுக் கடப்பு" சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பொறியியல்துறை மாணவன் தர்மசேகரன் எழுதிய கொட்டுக்கடப்பு என்னும் சிறுகதை நூல் வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் திருமதி கோகிலா மகேந்திரம் (வலயக் கல்விப்பணிப்பாளர்) தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஆசியுரையை ஆறு திருமுருகன், ஸ்ராலின் அடிகளார் ஆகியோர் நிகழ்த்தினர். வாழ்த்துரையை ஞா.ஞானகுமரன் மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து தலைமையுரையை திருமதி கோகிலா மகேந்திரன் நிகழ்த்தினார். வெளியீட்டு உரையை பொறியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிவானந்த மூர்த்தி நிகழ்த்தினார். முதல் பிரதியை விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் குமாரவடிவேல் வெளியிட்டு வைக்க அருளானந்தம் பெற்றுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து மதிப்பீட்டு உரையை செங்கையாளியன் க.குணராசா (மாநகரசபை ஆணையாளர்) தமிழ் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை 4ஆம் வருட மாணவன் கு.றயீவன் நிகழ்த்தினார்.

# பன்னாலையில் மீளக்குடியமர விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு படைத்தரப்பில் மௌனம்!

## வாக்குறுதிகளும் காற்றில் பறந்தன

(வடமராட்சி)

**வலிகாமம் வடக்கின் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே பன்னாலைப் பகுதியில் மீளக்குடியமர விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக யாழ்.மாவட்ட படைத்தலைமை மௌனம் சாதித்து வருவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**

புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க நிலைகளுக்கப்பாலுள்ள சூனியப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர அனுமதிப்பதாக யாழ். சிறிலங்கா படைத் தலைமை அறிவித்திருந்தது. இதையடுத்து தெல்லிப்பளையின் பன்னாலை கரின்சியா பகுதியில் பல குடும்பங்கள் மீளக்குடியேறியிருந்தன. இவற்றில் மூன்று குடும்பங்கள் கடந்தகால யுத்த நடவடிக்கைகளினால் சேதத்திற்குள்ளாகியிருந்த தமது வீடுகளை திருத்தி குடியமர்ந்துள்ளன.

எனினும் 2003ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி முதல் அப்பகுதியில் மீளக்குடியமரவோ அல்லது அப்பகுதியிலுள்ள சேதமடைந்த வீடுகளைத் திருத்தம் செய்யவோ யாழ். படைத் தலைமை அனுமதி மறுத்து வருகின்றது. ஆனாலும் இப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து, யாழ்.குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வசித்து வரும் குடும்பங்களை மீளக்குடியமர அனுமதிப்பதற்கு தயாராக இருப்பதாகவும் யாழ்.மாவட்ட படைத்தலைமை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளது.

ஆயினும் இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சுன்னாகம் பகுதியில் வசித்துவரும் நான்கிற்கும் அதிகமான குடும்பங்கள் மீளக்குடியமரவும், தமது வீடுகளைத் திருத்திக்கொள்ளவும் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் யாழ்.மாவட்ட படைத் தலைமையைத் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருவதாக வலிவடக்கு பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வனுமதியினைக் கோரி சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சிடம் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது முறையிட்டுள்ளனர். (27)

# யாழ். சைவபரிபாலன சபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினால் 2004 வைகாசிமாதம் நடைபெற்ற சைவசிததாந்த பிரவேச/ பால பண்டிதர் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன அவை வருமாறு;

**சைவசிந்தாந்த பிரவேச பண்டிதர்** சபாநாதன் பாரதி, சுன்னாகம் 2ஆம் பிரிவு, அ.வேதவித் தியாசாகரர் கந்தர்மடம் 3ஆம் பிரிவு, செல்வி. நிஷாந்தனி பரராஜசிங்கம் காரைநகர்3ஆம் பிரிவு, செல்வி சிவரூபி நமசிவாயம் காரைநகர் 2ஆம் பிரிவு, க. சிவனேசன் கொடிகாமம் 3ஆம் பிரிவு, மு.அருள்செல்வநாயகம், கொடிகாமம் 2ஆம் பிரிவு.

**சைவ சிந்தாந்த பாலபண்டிதர்:-** செல்வி. சுகாஜினி கிருஷ்ணபிள்ளை சாவகச்சேரி 2ஆம் பிரிவு, வைத்திலிங்கம். இராகுநாத முதலியார், யாழ்ப்பாணம் 2ஆம் பிரிவு, தவராசா. விக்கினேஸ்வரன் யாழ்ப்பாணம் 2ஆம் பிரிவு.

**சைவ சிந்தாந்த பண்டிதர்:-**

சுவாமிநாதபிள்ளை. தேவமனோகரன் இணுவில் 2ஆம் பிரிவு, செல்வி. சசிலேகா கனகசுந்தரம் பிள்ளை அச்சுவேலி, 2ஆம் பிரிவு, செல்வி வா.சாந்தினி சுழிபுரம் 2ஆம்பிரிவு, குஞ்சிதபாதம். சுரேஷ்குமார் யாழ்ப்பாணம் 2ஆம் பிரிவு, செல்வி புஷ்பலதா. இராமலிங்கம் கிளிநொச்சி 2ஆம் பிரிவு.



மனித உரிமைகளுக்கான சுயாதீன முறைப்பாட்டு ஆணைக்குழுவின் அலுவலகம் நேற்று முன்தினம் திருநெல்வேலியில் திறந்து வைக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (36)

# கட்டைவேலி–நெல்லியடி ப.நோ.கூ.சங்க 82ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் 82ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவை 25,26 ஆகிய இரு தினங்கள் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் வழமைபோல் சிறப்பாகக் கொண்டாடியது.

முதல் நாள் நிகழ்விற்குச் சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைவராகவும், சி. சிவசுப்பிரமணியம் (யா. மா.சி.க.வ.கூ.ச.சமாசம்) பிரதம விருந்தினராகவும், இரண்டாம் நாள் நிகழ்விற்குச் சங்க உப தலைவர் ஆ. சண்முகம் தலைவராகவும், பெ. கனகசபாபதி (தலைவர், யா. மா.கூ.சபை) பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி. சிவமகாராசா, கௌரவ விருந்தினர்களாக கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ. இராகவன், நெல்லியடி ம.ம. வித்தியாலய அதிபர் செ. சேதுராசா, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர் வே. சிவசிதம்ப்ரம் ஆகியோர் பங்குபற்றிச் சிறப்பித்தார்கள்.

சங்கத் தலைவர் தனதுரையில், சங்கம் செயற்படுத்தும் சேவைகளையும், தற்போதைய நிலையில் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியில் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் விரிவாக எடுத்துக் கூறினார்.

நிகழ்வின் சிறப்பு அம்சமாக 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் 65 பேருக்கும், க.பொ.த. (சா/த) பரீட்சையில் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற 39 பேருக்கும், க.பொ.த. (உ/த) பரீட்சையில் உயர் புள்ளி பெற்ற 11 பேருக்கும், கல்வி சார் போட்டிகளில் பங்குபற்றி பரிசு பெற்ற மாணவர்களுக்கும், மாவட்ட மட்ட கூட்டுறவாளர் தினப் போட்டியில் பங்குபற்றிப் பரிசு பெற்றோருக்கும், பங்குபற்றியோருக்கும், சங்க நூலகத்தில் கிராமமாக நூல்களைப் பெற்று வாசிப்பவர்களுக்கும், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி பயிற்சியில் பங்குபற்றிச் சித்தியடைந்தோர்களுக்கும், வைப்பிற்கு எதிராக நுகர்ச்சிக் கடன் பெற்று ஒழுங்காகத் திரும்பச் செலுத்தியோருக்கும், சங்கக் கிராமிய வங்கியில் கடன் பெற்று தவணை தப்பாது கடன் மீளளித்தவர்களுக்கும் பரிசில்கள், அன்பளிப்புகள், ஊக்குவிப்புகள் வழங்கியதோடு, பணியாளர்கள், மூத்த கூட்டுறவாளர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றது. கலை நிகழ்வில் மாவட்டப் போட்டிகளில் பங்கு பற்றிப் பரிசு பெற்ற தனி நடனம், பாடல்கள், பாலர் பாடசாலை நிகழ்வுகள் என்பன இடம் பெற்றது. கலை நிகழ்வில் மாவட்ட மட்டக் கூட்டுறவாளர் தினப் போட்டி யில் பரிசு பெற்ற துன்னாலை சி.க.வ.கூ. சங்கத்தினரின் கூட்டுறவில் பலநோக்கு என்ற நாடகமும் கல்வி வலய மட்டப் போட்டியில் பரிசு பெற்ற விக்கினேஸ்வராக் கல்லூரியின் "அரிச்சந்திரா" நாடகமும், பார்வையாளர்கள் மத்தியில் பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறிலங்காவின் அரசியல் சோதிடப் படியா? அரசியல் விஞ்ஞானப்படியா?

**அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக்காரியாலயத்துக்காக அடிக்கல் நாட்டு விழா கொழும்பில் நடைபெற்றது. இத்தருணத்தில் வெளிநாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த கட்சியின் தலைவியும், நாட்டின் அதிபதியாகியவருமான சந்திரிகா அப்போதைய கிரகநிலை, சுபநேரம் ஆகியவை சாதகமற்றுக் காணப்படுவதால் நிகழ்வை வேறொரு நாளுக்கு ஒத்திப்போடுமாறு தொலைபேசி மூலம் உத்தரவிட்டார். எனினும் நிகழ்ச்சிக்கான அனைத்து நிகழ்வுகளும் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததால் நிகழ்வை நடத்தி முடிக்க வேண்டியதாயிற்று. இந்த சுபநேரம், கிரகமாற்றம் என்பன தொன்று தொட்டு கணிக்கப்பட்டு நிகழ்வுகள் நடைபெறுவதால் சிறிலங்காவின் ஆட்சி சோதிட விஞ்ஞானத்திற்கேற்பவா அரசியல் விஞ்ஞானத்துக்கேற்பவா நடைபெறுகிறது என்பதை கட்டுரையாளர் ஆராய்கிறார்.**

சிறிலங்காவில் இன்று நடைபெறும் ஆட்சி நிர்வாகம் அரசியல் விஞ்ஞானத்துக்கேற்பவன்றி சோதிட விஞ்ஞானத்துக்கேற்பவே நடைபெறுகின்றது. காரணம் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட சனி மாற்றம் தொடர்பாக அரசியல்வாதிகள் மட்டுமல்லாது அரசியலில் ஈடுபாடுள்ளோரும் அவ்வாறே கூறுவது ஆகும். இந்தச் சனிக் கிரக மாற்றம் சந்திரிகாவுக்கு சாதகமானதென சிலரும், இல்லை அது சந்திரிகாவுக்கு பாதகமானதாக அமையும் என வேறு சிலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இம் மாற்றம் சந்திரிகாவைப் பாதிக்காதென கூறுமளவிற்கு அக்கறையிருப்பதை கடந்த சில தினங்களாக இது பற்றியே ஊடகங்

எவ்வளவு தூரம் நம்பினார் என்பதைப் பதவிக் காலம் முடிவுறும் தருணத்தில் பாராளுமன்றைக் கலைக்காமல் தனது கையில் அதிகாரத்தை வைத்திருப்பதற்கு அவர் சிந்தித்திருந்தமை வெளிப்படுத்தும்.

எனினும், அன்று நெருங்கிவரும் பொதுத் தேர்தல் தொடர்பாக ஆலோசிப்பதற்கு சிறிமா இலங்கரத்னவைச் சந்திப்புக்கு வருமாறு அழைத்திருந்ததாகவும், அன்று அம்பாறை எம்பியாகவிருந்த செனரத் சோமரத்னவின் கருத்தைத் தன்னிடம் தெரிவித்து தனது அபிப்பிராயம் யாது எனக் கேட்டதற்கு பின்னர் பதில் கூறுவதாகக் கூறித்தான் திரும்பி வந்ததாக இலங்கரத்னா குறிப்பொன்றின் மூலம்

லோசித்த குழுவின் தலைவராக செயற்பட்ட தி.மு. ஜயரத்னவை இலங்கரத்ன தனது வீட்டுக்கழைத்து கதைத்துள்ளார். நீண்ட விவாதத்தின் பின்னர் இதன் தீமை பற்றி எடுத்துக் கூறியுள்ளார். இந்த வகையில், அவர் சிறிமாவோவின் மேற்படி முடிவைத் தடுத்துள்ளார்.

அதனால், 1977 பொதுத் தேர்தலில் சிறிமாவோ பிரதமராக போட்டியிட்டு படுதோல்வியைச் சந்தித்ததுடன் 1983 வரை தேர்தலுக்கு முகம் கொடுக்க முடியாத நிலைக்கும் ஆளானார். அதாவது, அவரது குடியுரிமைகூட பறிக்கப்பட்டது. அவருக்கு அந்த நிலையேற்பட்டமை கிரக மாற்றம் என்று கூறப்பட்டது.

ஆனால், சோதிட ரீதியில் அன்றி அரசியல் தத்துவ ரீதியில் ஜே.ஆர்க்கும் இதுவே நடந்தது 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் ஆறில் ஐந்து பங்கு வாக்குகளை மடியில் கட்டிக் கொண்டு அவர் அரசு நடத்தினார். எனினும், அவரின் இறுதிக் காலப் பகுதி மிகவும் கஷ்டமானதாகவே காணப்பட்டது. ஒன்று



ஜே.ஆர்



ஆர்.பிரேமதாச



சிறிமாவோ



சந்திரிகா

வடக்கு-கிழக்கு பிரச்சினை, அடுத்தது தென்னிலங்கையில் ஜே.வி.பி. யினரின் பிரச்சினை.

கள் கருத்து வெளியிட்டிருந்ததைக் கொண்டு அறியலாம். சனிக் கிரக மாற்றம் தொடர்பில் 1976ஆம் ஆண்டிலும் இவ்வாறானதொரு அச்சம் அப்போதைய் ஐக்கிய முன்னணி அரசுக்கும் இருந்தது. அது சிறிமா கிரக மாற்றித்தினால் வீழ்ச்சியுறுவார் என ஐ.தே.கட்சி எண்ணியமையாகும். அந்தச் சந்தர்ப்பமும் அவரின் பிரதமர் பதவிக் காலத்தின் இறுதி நாட்களாக இருந்தது. அத்துடன், "சிறிலங்காவில் ஜே.ஆர். ஜெயவர்த்தன" என்ற நூலை எழுதிய திஸாநாயக்க சிறிமாவோவை அந்நாட்களில் நாட்டில் இருந்து வெளியேறுவது நல்லது என்று கூறியிருந்தார். அந்த அறிவுறுத்தல்களுக்கேற்ப சிறிமாவும் மலேசியா, இந்தியா, பிரிட்டன், இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டார். அத்துடன் அதற்கு முன்பும் கதிர்காமம், தலதா விகாரை, சேருவில, முன்னேஸ்வரம், மகியங்கனை போன்ற கோயில்களுக்குச் சென்று யாகம் செய்து வழிபட்டார்.

அந்த சனி மாற்றம் தனது அரசியல் வாழ்விற்கு ஏற்படுத்திய தாக்கத்தை தெரிவித்திருந்தார். அத்துடன் அவர் அன்றைய காணியமைச்சராகவிருந்த ஹெக்டர் கொப்பே கடுவவுடன் கலந்தாலோசித்ததாகவும் தெரிவித்துள்ளார். தமது முடிவுகளை தள்ளிப் போட்டாலும் அப்போதைய சனாதிபதியை ஓய்வில் அனுப்பிவிட்டு சிறிமா சனாதிபதியாக பதவியேற்பதாக அவர் அவசர முடிவுக்கு வந்தார். மக்களின் கருத்தை அறியாத நிலையில், தேர்தலில் தோல்வியடைவ[illegible] பதவியை இழக்க நேரிடும் என்பதை நாம் உணர்த்தினோம் என்று தனது குறிப்பில் இலங்கரத்ன தெரிவித்திருக்கிறார். அதனால், அவரின் கோரிக்கைக்குத் தான் இணங்கத் தயங்கியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். மேலும் இது தொடர்பாக ஆதரவளிக்கும் சிலருடன் தனது அலுவலகத்தில் கலந்தா

அன்று ஜே.ஆரின் இறுதிப் பதவிக் காலத்தின் போது சனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார் எனக்கருதப்பட்டது. அதனால், [illegible]வரது பத்து வருட கால ஆட்சியில் [illegible]ராணுவத்தினரின் ஒத்துழைப்பும் ஆதரவும் வெறும் சனாதிபதி[illegible]கக் கடமையாற்றினார் என்பதால் கிடைக்காதுவிடும் என ஜே.வி.பி. கருதியது மட்டுமன்றி அடுத்த 6 மாதங்களுக்கு அவர் பதவியில் இருக்க முடியாது என்றும் ஜே.வி.பி. கருதியது. அதன் மூலம் அரசு மீது தீவிர போக்கைக் கடைப்பிடித்து அரசியலுக்குள் பிரவேசிக்கவும் ஜே.வி.பி. திட்டமிட்டது. ஆயினும் 1988 ஆம் ஆண்டு சனாதிபதியாக பிரேமதாசவை அவர் அறிமுகப்படுத்தியதோடு ஜே.வி. பி யின் கனவு பலிக்காமல் விட்டது.

முதலாவது சனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைக்குப் பின்னர் சனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரால் கண்டியிலுள்ள சனாதிபதி மாளிகைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்ட போது அது அவரின் கடைசி தலைமை தாங்கும் கூட்டம் என்பதை அறிந்திருக்கவில்லை. காரணம் இவரது தலைமைத்துவம் பின்னர் சனாதிபதியாக வரவிருந்த பிரேமதாசவுக்கு முட்டுக் கட்டையாக இருந்தமையேயாகும். இந்திய-இலங்கை ஒப்பந்தமும் இதற்கு இடையூறாக இருக்கின்றது எனக் கருதிய பிரேமதாச அதனை நீக்கிவிடவும் ஜே.ஆர் சம்பந்தப்பட்டதாக எதுவும் இருக்கக் கூடாது என்றும் அவர் சிந்தித்தார். அதனால் ஜே.ஆர் சனாதிபதித்தேர்தலுக்கு போட்டியிடாமல் தானாகவே அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார்.

அதேபோன்று ஒரு நிலைப்பாடே இன்று சந்திரிகாவுக்கும் ஏற்பட்டிருக்கிறது. இந்த வருடம் நவம்பர் மாதத்துடன் அவரது பதவிக்காலம் முடிவுக்கு வரவிருக்கிறது. சோதிட ரீதியாக பார்க்குமிடத்து அவரின் தாயாரான சிறிமாவோவுக்கு அன்று சனிமாற்றம கூடாமல் இருந்தது போன்றே சந்திரிகாவுக்கும் கூடாத காலம் என்று கூறலாம். அரசியல் ரீதியாக பார்க்குமிடத்து ஜே.ஆரைப் போல ஓய்வு பெறுவது நல்லது. ஆயினும் அவர் ஓய்வில் செல்வதை விடுத்து அரசியல் விளையாட்டை ஆரம்பிக்கப் போவதாகச் சிலர் கருதுகின்றனர். அதாவது அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தி நிறைவேற்று சனாதிபதி முறையை நீக்கி விட முனைவதாகவும், சிலர் மீண்டும் சனாதிபதியாகப் போட்டியிடவுள்ளனர் எனவும் கருதுகின்றனர். வேறு சிலர் சந்திரிகா சனாதிபதிப்பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டு பாராளுமன்றில் பிரதமராக பதவியேற்று நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரை சனாதிபதியாக நியமித்து பின்னர் அவரையும் நீக்கிவிட்டு மீண்டும் சனாதிபதி பதவியை ஏற்கும் திட்டம் இருப்பதாகவும் கருதுகின்றனர்.

ஆனால் சந்திரிகா ஒரு கணம் உலக அரசியலையும் சற்று நோக்குவது நன்று.

**உப்புள் ஜோசப் பர்ணாந்து (லங்காதீப)**
**தமிழில்: வடிவேல்**

நீண்டகாலமாக கடமையாற்றிய மாலைதீவு சனாதிபதி அப்துல்கயூம் நீண்டநாள் ஆட்சி செய்திருப்பினும் அவரை மக்கள் நிராகரித்து விட்டனர். சீனாவின் லீகுவான்யுவை மக்கள் நிராகரித்ததால் அவரது மகனுக்கு சந்தர்ப்பத்தை வழங்கி லீகுவான்யு பதவி விலகினார். அதுபோல் சந்திரிகா லீகுவான்யுவைப் போன்று செயற்படுவாரா கயூம் போல செயற்படுவாரா என அவரே தீர்மானிக்க வேண்டும்.

## திருட்டில் ஈடுபட்டு விசாரிக்கப்பட்டவர் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது!

(மன்னார்)

மன்னாரில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட நபர் போதைப்பொருள் பாவிப்பவர் எனத் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவரிடம் செருப்பைத் தைக்கக் கொடுத்த பெண் அச்செருப்பு வழங்கப்பட்ட பையினுள் ஒரு பணப்பை இருப்பதைக் கண்ட அத் தொழிலாளி அதனைக் களவெடுத்துள்ளார். பின்னர் அப் பெண் அருகில் உள்ள கடைக்குச் சென்று தனது பணப்பையைப் பார்த்த வேளை பணப்பை காணாததைத் தொடர்ந்து மீண்டும் வந்து செருப்புத் தைப்பவரிடம் கேட்டபோது தான் எடுக்கவில்லை என மறுத்துவிட்டார். பின்னர் அத்தொழிலாளி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அப்பணம் மீளப்பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்சமயம் இவர் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளமை இனங் காணப்பட்டு பொலிசில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (மி)

## சோற்றுடன் அலுமினியப் பாத்திரத்தை களவாடிச் சென்றவர் வீதியில் கைது

(மன்னார்)

மன்னார் நகர்ப்பகுதியில் தினமும் களவுகள் அதிகரித்துச் செல்கின்றன. முக்கியமாக நூல்நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்களில் விடப்படுகின்ற துவிச்சக்கர வண்டிகள் களவாடப்படுகின்றன. அத்துடன் பழைய இரும்புகள், அலுமினியப் பொருட்கள் மன்னாரில் நல்ல விலைக்கு வாங்கப்படுவதால் இவ்வாறான பொருட்களின் களவுகள் அதிகரித்துள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை அலுமினியப் பாத்திரம் ஒன்றில் சோறு சமைத்து வைத்திருந்த வேளை அதனைக் களவாக எடுத்தவர் வீதியில் வைத்து பொலிசாரினால் சோதனையிடப்பட்ட வேளை கைது செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(மி)

## ஓய்வு மண்டபம் திறப்பு

முல்லைத்தீவு செல்வரபுரம் கிராமத்தில் கடந்த புதனன்று மீனவர் ஓய்வு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

செல்வபுரம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் அருள்நேசபாலன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை செல்வபுரம் கிராம அலுவலர் சி.மோகன், முல்லை நகர் புனரமைப்புக்குழுத் தலைவர் இராசையா ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை. மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் ரங்கன் ஏற்றினார். கருத்துரைகளைத் தொடர்ந்து மீனவர்களுக்கான ஓய்வு மண்டபத்தினை முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் ம.அன்ரனி ஜெயநாதன் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.(20)



கிளிநொச்சி சமுதாய முன்னேற்ற நிலைய பெண்கள் வேலைத்திட்ட பகுதியினரால் சுயதொழில் முயற்சியை மேற்கொள்ளும் வகை யில் பெண்களுக்கு செங்கற்கள் உற்பத்திப் பயிற்சி மேற்கொள்ளப் பெற்றுவருகின்றது. முதற்கட்ட விளக்கமுறைப் பயிற்சியில் நேற்று முன்தினம் கலந்து கொண்டுள்ள பயிலுனர்களைப் படத்தில் காணலாம். (சோ,கு)

## 61 கருத்திட்டங்கள்

வவுனியா மாவட்டத்தில் நிகொட் திட்டத்தின் கீழ் 61 கருத்திட்டங்களுக்கான பணிகள் இடம் பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. கல்வி, மருத்துவம், நீர் விநியோகம், வீதி புனரமைப்பு, சுயதொழில் என்பன 293.3 மில்லியன் ரூபாவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றில் 36 கருத்திட்டங்கள் 171.3 மில்லியன் ரூபா செலவில் முடிவடைந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எஞ்சிய பணிகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவதாகவும் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்



## நல்லூரான் தேரேறிவரும் வேளை எங்கள் துன்ப துயரமெல்லாம் அகலட்டும்



ஒவ்வோராண்டும் ஆலயங்களிலே தேர்த் திருவிழா நடைபெறுவதுண்டு, பண்டைக்கால போர்ப் படைகளிலே ஒரு பகுதி தேர்ப்படையாகும்.

"நெடுநல் யானையும் தேரும் மாவும் படையமை மறவரும்"

என்று எங்களுடைய பண்டைய இலக்கியம் புறநானூறு கூறுகின்றது. இங்கு யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் நான்கு படைகளுள் ஒன்றாகிய தேர்ப்படையும் குறிப்பிடப் படுகின்றது. மன்னர்கள் எதிரிகளுடன் போரிட தேரிலே சென்றார்கள். எம்முடைய கடவுள்களோ மக்கள் துயர், துன்பம் என்னும் எதிரிகளை வென்று துரத்த ஆண்டு தோறும் தேரேறி வீதியுலா வருகிறார்கள். "திருவாரூர் பேரழகு" என்று தமிழ் நாட்டிலே ஒரு பழமொழி உண்டு. பெரியபுராணத்திலே,

தேராகும் நெடுவீதித் திருவாரூர்...." என்று கூறுகிறார். தேர்த்திருவிழா எல்லாக் கோயில்களிலுமே சிறப்பாக நடைபெறுவதுண்டு. நல்லூர்க் கந்தனுடைய தேர்த்திருவிழாவும் பெருந்தொகையான மக்கள் சூழ ஒவ்வோராண்டும் நடைபெற்று வருகின்றது. இந்த ஆண்டும் நல்லூரான் தேரேறி வருகிறான். தமிழ்க் கடவுள் முருகனுடைய அருளினை வேண்டி நிற்பவர்கள் யாம்.தமிழ் முருகனுடைய அருள் வேண்டிய ஒருவர் அவனுடைய தேருடன் வருகிறார். தேராலே அவன் இறங்கும் போது எங்கள் துன்பம் துயரமெல்லாம் கூறலாம் என்று நல்லைக்கந்தனின் தேரோடு வந்தவர் தேர் இருப்பில் இருந்த போது அங்கு முருகனைக் காணாமல் திகைக்கிறார். "ஏறிவந்த தேரிருக்கு இழுத்து வந்த வடமிருக்கு எங்கேயடா நீயொழித்தாய் முருகா"

என்று கவிஞர் (புதுவை இரத்தினதுரை) பாடுகிறார்.

கோயிலுக்குள்ளே போய் இறைவனைத் தரிசிக்க முடியாதவர்களெல்லாம் ஆண்டு தோறும் அவன் தேரேறி வரும் போது நன்றாகத் தரிசிக்கலாம்.யாழ்ப்பாண மாவட்டத்திலேயுள்ள பெருந்தொகையான கோயில்களிலெல்லாம் தேர்கள் இருக்கின்றன. ஓர் ஆலயத்தின் தேர்த்திருவிழாவைக்கண்டு கொண்டால் ஓர் ஆண்டு அந்தக் கோயிலிலே கும்பிட்டதற்கு நிகராகும் என்று கூறுவர். இவ்வாறு பல ஆலயங்களிலே தேர்கள் சிறப்புற்றிருக்கின்றன.ஆனால் தொண்டமனாற்றுச் செல்வச்சந்நிதியானுடைய தேரோ இரண்டு தடவைகள் எரிக்கப்பட்டுள்ளன.

"சந்நிதியில் உந்தனது தேரை எரித்தார்கள் தமிழ் தந்தவனே எங்களுக்குச் சாவை விரித்தார் விண்ணதிரக் குண்டுமழை இன்று பொழிவார் எங்கள் வேலவனே அந்நபர்கள் என்று விழுவார்கள்"

என்று புதுவை இரத்தினதுரை பாடுகிறார்.புதிதாகத் திருமணம் செய்தவர்கள் தேர்த்திரு விழாவினைப் பார்க்கக் கூடாதென்று கூறும் ஒரு வழக்கம் யாழ்ப்பாணத்திலே உண்டு. இந்நம்பிக்கை அல்லது வழக்கம் எதற்காக ஏற்பட்டது என்பதற்குத் தெளிவான விடைஎதுவும் கூறமுடியாதுள்ளது. இறைவனது ஐந் தொழில்களிலே அழித்தல் எனும் சம்கார தொழிலைத் தத்துவப் பொருளாகக் கொண்டமைவதே தேர்த் திருவிழா. அழிக்கும் தொழிலுக்கு புறப்பட்டுச் செல்லும் தேரினைப் புதிதாக மணமுடித்தவர்கள் பார்க்கக் கூடாது என்னும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கலாம், இன்னொரு பக்கத்தில் தேரின் தத்துவம் சமூகநோக்கிலே ஒற்றுமையையும் ஒன்றிணைப்பையும் வலியுறுத்துவதாக அமைகின்றது. "ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிறதே வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை" என்று எங்கள் நாட்டுக் கவிஞன் மகாகவி பாடுகிறான். இறைவன் ஏறிவரும் தேர்,அதன் வடத்தை ஒரு தடவை தொட்டால் இறைவனையே தேரில் வைத்து இழுத்ததன் பலனைப் பெறலாம் என நம்புகின்றனர் மக்கள்.

தேர்த்திருவிழா எங்கள் பண்பாட்டோடு இணைந்த தொன்றாயுள்ளது.சிறுவயதிலேயே நாங்கள் சிறு தேர் கட்டி இழுத்து விளையாடிய நினைவு உண்டு. இச் சிறு தேர் எவ்வாறுகட்டுவது என்பது பற்றிக் காதலியாற்றுப்படை நூலிலே பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை

''தென்னங் குரும்பை தெரித்துதான் எடுத்தே அன்னதன் மேலே அளவுடை ஈர்க்கை அமைவுறக்குத்தி அழகு சிறுதேர் பூப்பல சூடிப் புனைந்தினிது இயற்றி" என்று கூறுகிறார்.இச் சிறுதேர் பலசிறுவர்களாலே இழுத்துச்செல்லப்படும்.அவ்வாறு இழுத்துச்செல்லப்படுமுன் அச்சிறு தேரை அலங்காரம் செய்வதுண்டு. காதலியாற்றுப்படை ஆசிரியர்

"பூப்பல சூடிப் புனைந்தினிது இயற்றி நாப்பட்கடவுளை நலமுடன் ஏற்றி காகா டுண்டுண் காகா டுண்டுண் ஈதோ சாமி எழுந்தெதிர்வாறார் காகா டுண்டுண் காகா டுண்டுண் அம்மா வழிவிடு ஆத்தை நீ விலகு காகா டுண்டுண் காகா டுண்டுண் என்றே இயம்பி ஏறு தேரினைக்கட்டி இழையால் பற்றி இழுத்தும்"

என்று சிறுவர் சிறு தேர் உருட்டும் காட்சியினைச் சித்தரிக்கிறார்.

வேலன் தேரேறி வரும் காட்சியினை செந்நெறிப் புலவர்களும் பாடியுள்ளனர். சாதாரண குறவர்களும் தமக்கியல்பான முறையிலே,

" தேரில் வாறாண்டி-வேலன்
தெருவில் வாறாண்டி
ஆனைமுகன் வேலனுக்கு அண்ணனாமடி
அவனைக்காட்டி வள்ளிப் பெண்ணை மணந்து கொண்டாண்டி"

என்று பாடிவருவதை பல ஆண்டுகளுக்கு முன்னே நான் கேட்டிருக்கிறேன். நல்லூரான் தேரேறி வரும் வேளையிலேயே எங்கள் துன்பம், துயரமெல்லாம் அந்த வேலாயுதக் கடவுள் தீர்த்தருள வேண்டுமென்று பணிந்து வணங்குகிறோம்.

பேராசிரியர்
அ.சண்முகதாஸ்
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.




தேரேறிவரும் திருக்குமரன் திருவருள் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்

கலையழகு மிளிரும் தங்க வைர நகைகளுக்கு

விக்னேஸ்வரா நகைப்பூங்கா

205/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0214590022

10B, 34D, கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா.
தொ.பே: 024-222-1910 , 024-222 1857

457, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06
தொ.பே: 0112-559535



(சி-10183)

அலங்காரத்திருமுருகன் -தேரில்
எழுந்தருளும் இந்நாளில் -பட்ட
அவலமெல்லாம் நீங்கட்டும் -எங்கும்
அன்புச்சனை பெருகட்டுமென வேண்டுகின்றோம்.

ரூபா பன்முக வர்த்தக நிலையம்

இல.104A. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



தேரேறி வரும் நல்லூரான் நல்லருள் நாடெங்கும்பாலிக்குக!



திருமணப் பட்டுப்புடைவைகளின்
கைராசி ஜவுளியகம்

ராசி சில்க்ஸ்


இல: 70.71A. நவீனசந்தை (உட்புறம்).
T.P - 021-2225571 யாழ்ப்பாணம்.

இந்தியாவில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
ஜவுளித் தெரிவுகளுக்கு

நல்லி சில்க்ஸ்

இல:- 121/1. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
T.P:-021-2225573 (சி-10184)





# நல்லூர் கந்தசுவாமி கோவில்
# தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்






அடியார் துயர் அகல வேண்டும், முரகா!
இங்கு அடிமை நிலை மாற வேண்டும்.
சாந்தி, அமைதி நிலவ வேண்டும்.
சந்தோசம் எங்கும் மலர வேண்டும்.

## மூத்ததம்பி அன்னதான மடம்,

**C.Somaskandan**
139,கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
2389 நாடெங்கும்

(சி-10199)

தியாக வரலாற்று வீதியிலே
வண்ணத் தேரிலேறும் கந்தா
எங்கள் எண்ணமெலாம்
உன்னிடத்தை நாடிநிற்குதே-வாய்
ஏற்றிப் புகழ் பாமாலை
பாடிச் சொல்லுதே!





யாழ்நகரில் அழகு சாதனப் பொருட்களின்
மொத்த,சில்லறை விற்பனையாளர்கள்

## லக்சுமி பென்சி

இல:-244,கே.கே.எஸ்வீதி,
யாழ்ப்பாணம்

(சி-10200)

நல்லூர் நகரினிலே - தேரில்
வலம்வரும் நாயகனே!
எல்லையில்லாத வரமளிப்பாய்
பல தொல்லையில் இருந்து
எம்மைக் காப்பாய்.



உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்.

## முத்துமாரி நகைமாடம்

இல:-78, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10451)



நல்லூர் நாயகன் தேறில் வரும் இன்நாளில்
எல்லோர் மனங்களும் இன்பம் அடைக!

GREAVES LIMITED

## தில்லையம்பதி மோட்டோர்ஸ்





AGENTS FOR - GREAVES, SPARE PARTS
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும்
இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.

(மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்)

## தில்லையம்பதி மோட்டோர்ஸ்

T.V.S, பல்சர், ஸ்பிலிண்டர் உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
இல 236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-222 5710



(சி-10452)



## விவசாயிகளே! சிற்றுண்டிச்சாலை உ .ரிமையாளரே !

நீங்கள் தினமும் இரத்த வேர்வை சிந்தி உழைத்தது போதும். உங்களுக்குத் தோசை, வடை, சட்டினி, மிளகாய்க்கூட்டு அதைவிட கீரை வகை கடைய ஈரமாக அரைக்கும் இயந்திரம்.

எல்லாமே ஒரு கிலோவுக்கு 3/= ரூபாவுக்கு மேல் செலவு ஆகாது.

உங்கள் வருமானத்தை மூல் மடங்கு ஆக்க இன்றே விஜயம் செய்யுங்கள். எங்கள் ஸ்தாபனத்திற்கு நவின் கெனடி (சீன்னம்) பிறாண்ட் டீசல் என்ஜின் மின்சார மெஷின் மா அரைக்கும் இயந்திரம், நெல் குற்றும் இயந்திரம், தோல் நீக்கும் இயந்திரம், மரம் சீவும்வெட்டும் இயந்திரம் ஒரு நாளில் 20டன் இருந்து 40டன் வரையும் நெல் குற்றும் இயந்திரங்களும் இவ்வியந்திரங்களுக்கான பெல்ட், பெல்ட் பசை, றெக்ஸ் பீனேட் இவை எதுவானாலும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

குறிப்பு:- 60% வரையான வங்கிக்கடன் வசதிகள் செய்துதரப்படும்.



தேர் ஏறி வரும்
நல்லூரான்
அருள்நாடெங்கும்
பாலிக்குக!

## சமுத்திரா றேட்ஸ் லிமிட்டட்

117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021-222 2938

தொடர்புகளுக்கு:
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்
212,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021-222 5542

(சி-10453)

RAMCO CEMENT

தேரிலேறி வரும் நல்லூரான் அருள் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## ராம்கோ சீமெந்து
## RAMCO CEMENT

ஆசியாவின் முதல் தர(நம்பர்-1)

தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட
தொழிற்சாலையில் உற்பத்தி
செய்யப்படும் ராம்கோ சீமெந்தினை
நேரடியாக குடாநாட்டுக்கு இறக்குமதி செய்து
குடாநாட்டு மக்களின் பல கோடி
ரூபாய் பணத்தை மீதப்படுத்தினோம்.

(சி-8373)

SLS -107 அங்கீகாரம் பெற்றது
ISO -9002தரம் பெற்றது
BSS-12-1991தரத்திற்கு அமைவானது



ராம்கோ சீமெந்து ஏகஇறக்குமதியாளர்கள்


## ஈஸ்வரபகவான் & கொம்பனி

இல:91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021 2222350

குறிப்பு: முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு நேரடியாக ராம்கோ சீமெந்து விநியோகிக்கப்படும்.

(சி-10454)

RAMCO CEMENT



# நல்லூர் கந்தசுவாமி கோவில்
## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்






**டாட் என்ரபிறைஸ்**
**Dart Enterprise**

தேர் ஏறிவரும் நல்லூரான் அருள் நாடெங்கும் பாலிக்குக!



இலத்திரனியல் மற்றும் அழகுசாதன அன்பளிப்புப்பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இல:11,12 நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
இல:02, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். (மக்கள் வங்கி அருகாமையில்)
T.P:021-222 3098
021-222 7622
Fax:021-222 3098
(சி-10157)

**FedEx Express®**

விரைவு · பாதுகாப்பு · நம்பகத்தன்மை

**WESTERN UNION®**

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
E.mail:- thirumurugan @ lycosmall.com

**திருமுருகன் கொம் நெற்**

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
[Opposite All Cylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
[பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 2227310
(சி-10133)

பணம் பரிமாற்றம் இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் துரிதமாகப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு

சைவ உணவுப்பிரியர்கள் அனைவருக்கும் தேரேறிவரும் நல்லைக்கந்தன் அருள் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்



**ஸ்ரீ வாணி விலாஸ் சைவஉணவகம்**

இல:372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி:071-2370211

உங்கள் உணவுத்தேவையை பூர்த்தி செய்ய விஜயம் செய்யுங்கள்
ஸ்ரீ வாணி விலாஸ் சைவஉணவகம்
E-mail-vani@wow.lk

இல:144, கண்டி வீதி, வவுனியா.
தொ.பேசி:024-4589777
(சி-10158)

சுபமுகூர்த்தப்பட்டுப்புடைவைகளின் அரங்கம்




ஓராறு முகம் கொண்டு உலகை ஆளும் திருக்குமரா! ஈராறு கரமதாலே எங்களை தினம் காத்திடுவாய்!



அனைத்துத்தரப்பினருக்கான சேட்,ரீசேட்,கோட் சூட் வகைகள்,டெனிம், சொக்கோ ரவுசர் வகைகள், ரவுசர் துணி வகைகள், ஜம்பர் வகைகள், பட்டு சாறி வகைகள், பேபி கவுண் வகைகள், ஸ்கேட் அன் பிளவுஸ் வகைகள், சல்வார் கமிஸ் வகைகள், கவுண் வகைகள், நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகளை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

**மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்**

10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். (மலாயன் கபே முன்பாக)
(சி-10159)

வண்ண அருளொளி வீசித் தேரில் வலம் வரும் எழில் குமரனின் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

**Sanshigaa**



**JEWEL HOUSE**

**சன்சிகா நகையகம்** සන්ෂිගා ජුවෙල්හවුස්


சிறியவர் முதல் பெரியோர் வரை யாவரும் விரும்பி அணியும் தங்க ஆபரணங்களை பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்



114, BAZAAR STREET,
VAVUNIYA
TEL: 024-2224028

யாழ் கணேசா நகையகம்
124, செட்டியார் தெரு,
கொழும்பு -11
(சி-10160)

# யாழ்ப்பாணம் – நல்லூ[ர்]
# தேர்த்திருவிழாச்சிற[ப்பிதழ்]



நல்லை ஆறுமுக வேலன் ~தன் அருளொடு இன்பம் அனைத்தும் இன்றைய நன்நாளில் எல்லோர்க்கும் சந்திட்ப் பிரார்த்திக்கின்றோம்.
உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22கரட் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்.
சாரங்கா நகைமாடம்
இல:157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T-P-021-2222480, Fax- 021-222 2480
சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்
இல.45,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021- 2226059
(சி-10165)

ஆறுபடை வீடுடைய
ஆறுமுகக் கடவுளே!
எங்களைத் தினம் காத்திடப்பா!
நங்கையர் விரும்பும் நவநாகரீக நகை வடிவங்களை நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
சிறி நதியா நகை மாளிகை
சானுயா
சிறிரூபா
நகை மாளிகை
இல:01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-2222709
(சி-10166)

வண்ணத்தேரேறி வீதி வலம்வரும் திருக்குமரன் நம் மக்கள் துயரறிந்து – அவர் மனம் குளிர மனதார வேண்டுகின்றோம்.
உங்கள் நாவிற்கினிய குளிர்பான வகைகளை சுவைத்து மகிழ ஒரு முறை விஜயம் செய்து பாருங்களேன்.
கல்யாணி கிறீம் ஹவுஸ்
இல:73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-10167)

## தேரேறி வருகின்றான் நல்லை[க்கந்தன்]

சரித்திரப் பிரசித்தி பெற்ற அலங்காரக் கந்தனாக தமிழ் மண்ணாம் யாழ்ப்பாணத்தில் நல்லையெம்பதியில் பன்னெடுங்காலமாக அருளாட்சி செய்து வரும் நல்லைக் கந்தனின் தேர்த்திருவிழா இன்றாகும். இலட்சோப மக்கள் மத்தியில் இந்திர விழாப்போல நல்லை நகர் காட்சியளிக்கின்றது.

தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோவில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருகனுக்கும், தமிழருக்கும் இடையிலுள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற் பட்டதெனலாம் ஈழத்திலே கருணைக்கடலாகிய முருகன் கதிர்காமத்திலும், நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், கந்தவனக்கடவை,மண்டூர், சித்தாண்டி, வெருகல் முதலிய புண்ணிய தலங்களில் கோவில் கொண்டு அருள்பாலித்து வருகின்றான்.

யாழ்ப்பாண மண்ணிலே சைவத்தமிழ் மரபின் குன்றாக விளங்குவது நல்லூர்-தமிழ் மன்னர்களின் இராசதானியாகப் போற்றப்படுகின்றது. சைவ மக்களும், சைவ மன்னர்களும் வணங்கிய கீர்த்தி வாய்ந்த முருகன் ஆலயச் சிறப்பினை நல்லூர் பெற்று விளங்குகின்றது.

தமிழ் நாட்டை அரசர்கள் பலர் தம் பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உருவாக்கினார்கள். பாண்டி நாட்டில் வீரபாண்டிய நல்லூர், அரிகேசரி நல்லூர், மானாபரணநல்லூர், செய்துங்க நல்லூர் முதலிய ஊர்கள் பாண்டிய குலத்தைச் சேர்ந்த மன்னர் பெயரை விளக்கி நிற்கின்றன. சோழ நாட்டின் பெருஞ்சோழ மன்னர்கள் உண்டாக்கிய நல்லூர்களைச் சாசனங்களில் காணலாம். முடிகொண்ட நல்லூர், அநபாய நல்லூர், திருநீற்றுச் சோழ நல்லூர், திருத்தொண்டர் தொகை நல்லூர், சிவபாத சேகர நல்லூர், கலிகடிந்த சோழ நல்லூர் முதலிய நல்லூர்கள் சோழ மன்னருடைய விருதுப்பெயர் பெற்ற பதிகள் ஆகும்.

ஈழத்திலும் நல்லூர் எனப் பெயருடைய கிராமங்கள் ஐந்துள. மற்றைய நாலும் பூநகரியிலும், குருநாகற்பகுதியிலும், களுத்துறையிலும் உள்ளனவாம். இத்தகு "நல்லூர்" என்ற பெயர் பல கிராமங்களுக்குச் சூட்டப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாண நல்லூரை எண்ணுகின்ற பொழுது அங்கே நல்லைக்கந்தன் ஆல[...] தோன்றுகின்றது.

**"வீரவேல் தாரைவேல் விண்[...]**
**தீரவேல் செவ்வேள் திருக்[...]**
**குளித்த வேல் கொற்றவேல் [...]**
**துளைத்த வேல் உண்டே து[...]**

முருகனுடைய கையிலே [...] வேலாகும். அஞ்ஞானப் பகையை[...] முருகன் தனிவழி நடக்கும் பக்தர்[...] முன்னும், பின்னும் எங்குமாகி இ[...] வேல் என்கிறார் அருணகிரிநாதர்.

"அச்சம் அகற்றும் அயில் வே[...] ஒப்பற்ற துணையாக விளங்குவ[...] எமக்கெல்லாம் வேலை [...]வெற்றி [...] நக்கீரர்


**"குன்றம் எறிந்ததுவும் குன்ற[...]**
**மன்றங் அமரர் இடர் தீர்த்த[...]**
**கைவிடாது நின்றதுவும் கற்[...]**
**மெய்விடா வீரன் கைவேல்" [...]**

இத்தகு வரலாற்[...] பெ[...] வெற்றிவேலே நல்லூர் கந்தசுவாமி[...] முருகப்பெருமானிடத்திலே அமை[...] அனுபவிக்கப்படுவதாகும். எவரெ[...] புரிய வேண்டுமென்ற கருணை உ[...] கடவுள் உலகிலே உள்ள [...] இயற்கையுடனானவனாகவும், வ[...] வருந்தியழைக்கும் போதெல்லாம் [...] புரிபவன் ஆறுமுகவன். ஐந்து முக[...] தோற்றுவிக்கப்பட்டவன் ஆறுமுக[...]

முருகனைச் செந்தமிழாலு[...] பாடலாம். ஏனெனில் தமிழாலே [...] பெருமனதோடு ஏற்றருளுபவன் [...] வைதாரையும் அங்கு வாழவை[...] செயலாலே "தீயவை புரிந்தா[...] தூயவராகி மேலைத்தொல்கதி [...] கச்சியப்ப சிவாச்சாரியார் [...] நெற்றிக்கண்ணிலேயிருந்து அக்கி[...] உதித்தவன் ஆறுமுகன். உமைய[...] நின்று இத்தரணி வாழ்வதற்குரிய [...]

இத்தகு பெருமை[...]த் [...] ஆறுமுகவன் அழகிய திருத்[...] கண்கொள்ளாக்காட்சியாக அமைகி[...] அழகான தேரேறி வருகின்றான். [...] பாவையர்கள் சகிதமாக திரு[...] ஈழத்தமிழினத்துக்கு வாழ்வு தர [...] வருகின்ற வேளை நல்லூர் பூவே[...] எங்கும் எந்த மயமும் கந்த மயமாக[...] எதிர்பார்த்திருக்கும் தேசத்தில் [...] வருகின்றான்.


க[...]
(த[...]



சிறப்பிதழாக்கம் – காரையூரான்

ஈழமண்ணில் அமைதி நிலவ
எழுந்துவாடா திருக்குமரா!
நாளும் வாழ்வில் நன்மைபயக்க - தேரில்
நகர்ந்து வாடா நல்லைக்கந்தா!
உங்கள் ஆளுமையான தோற்றத்திற்கு குடும்பத்துடன் வாருங்கள்
ரவி அன்ட்ராஜ் சில்க்ஸ்
இல:618, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2469
(சி-10168)

தேரில் ஏறிவரும் நல்லைக்கந்தன்
அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிர[...]
MD–90 மற்றும் ரீக்கொண்டிசன் மோட்டார் [...]
அசிட் வகைகள், சோலர் வகைகள் அனைத்[...]
அருள் விநாயகர் [...]
இல-108, ஸ்ரான்லி வீதி,
TOYOTA GENUINE PARTS
Guaranteed Motor Spares from M. M. Organisation
அருள் விநாயகர் [...]
இல-106, ஸ்ரான்லி வீதி, ய[...]
(சி-10169)



# நல்லூர் கந்தசுவாமி கோவில்
## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்






மயிலேறி விளையாடி - நம் மனம் குளிர வைப்பவனே!
தேரிலேறி வந்து நம்தேசமதைக் காத்திடையா!

அழகிய கலைநயம்...
எழி லுறு தொழில் வளம்...
உயர்தரமிகு தங்க நகைகளுக்கு...

22கரட் தங்க நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

தயா நகைப்பூங்கா



T.P: 021-2225846
0777-840379

213 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-10174)



தேரினில் ஏறி வரும் எம் தெய்வ முருகனின் தேவ அருள்
எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்!

முகூர்த்தப் பட்டுப்புடைவைகள்,
சாறி வகைகள், சல்வார் கிற், சோளிகிற்,
ஸ்கேட் அன் பிளவுஸ், சிறுவர் சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்.
பட்டு வேட்டி வகைகள், நூல் வேட்டிகள், ரீசேட் வகைகள்

ஆகியவற்றினைகொழும்பு விலையில்
மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் எண்ணக்கருவூல
டிசைன்களில்
வண்ணத் தெரிவுகளுக்கு
வருகை தாருங்கள்



Kamaleshwary Tex
கமலேஸ்வரி புடைவையகம்
77,1/1, பெரியகடை வீதி, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2226303
(சி-10175)

நல்லைப் பதியுறையும் நாயகனே!
உன்வரவு நாடெங்கும் நலம்புரிய
நல்வரவாகட்டும்!

TVS Victor More smiles per hour

TVS



TVS Lanka Private Ltd.இன்
அங்கீகரிக்கப்பட்ட (3S)
யாழ் முகவர்



TP-0777-340056
021 222-6185

சுசுக்கி மோட்டர்ஸ்
இல:-59, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-10176)

HERO HONDA
World No.1
Two-Wheeler Company

ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி
தேசநலன்காக்க தேரிலேறி வருக!

HERO HONDA 2 Year warranty


STAFFORD MOTOR CO-LTD இன்
அங்கீகரிக்கப்பட்ட (3S) யாழ் முகவர்

RG இரத்தினகோபால்ஸ்
இல:-63,65 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

TP-0777-340056
021 222-6185




(சி-10177)



# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ்




ஆறுமுகனே! உன் அருள்தனைப் பெறவே
இருகை கூப்பித் தொழுகின்றோம்!

Multilac®
www.multilac.com
சரியான வழியின் முன்னோடி

ISO 9001-2000 சர்வதேச தரச்சான்றிதழ் பெற்ற
Multilac ISO 9001 - 2000 CERTIFIED COMPANY

வடபகுதிக்கான ஏக
விநியோகஸ்தர்கள்

**கந்தவேலன் ரேடர்ஸ்**

இல-110, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P-021-222 2822



(சி-10180)



இன்று தேரேறிவரும் நல்லைக் குமரனருள் நாடெங்கும் பரவட்டும்!

துவிச்சக்கரவண்டி, துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள்,
பெப்சி,மிரான்டா சோடா வகைகள்
ரீ.வி, றேடியோ,வீடியோ,ஓடியோ கருவிகள்
அழகு சாதனப் பொருட்கள்

E.S.P E.S.P

விற்பனையில் யாழ் நகரில்
தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**

50.52,54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10182) (சி-8372)
தொலைபேசி-021-2222988
தொலைநகல்-021-2222368



நல்லூரான் நல்லருள் நாடெங்கும் பரவட்டும்!



டிவி, டெக், குளிர்சாதனப்பெட்டி,
றேடியோ, மின்விசிறிகள், ஜெனரேற்றர்,
கணனிகள், ஓடியோ வீடியோ சீடிப்பிளேயர்
இவையனைத்தையும் ஒரு வருட
உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்**



இல: 1C, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021-222 5349



(சி-10181)



தேரிலுன் துணையொடு நீ உலாப்போகும் காலை
எம்முன் தேங்கிய துயரினை நீக்கிடு முருகா!

LG **யாழ்ப்பாண மின்னகம்** LG

எமது மண்ணில் மங்காப்புகழ் பூத்த
மாபெரும் மகத்தான LG ஸ்தாபனத்தாரின்
இலத்திரனியல் பொருட்கள் அனைத்தையும்
யாழ் நகரில் ஒரே கூரையின் கீழ்
பெற்றுக்கொள்ளலாம்.



அபான்ஸ் லிமிட்டெட்டின்
அங்கீகரிக்கப்பட்ட
விற்பனையாளர்

**யாழ்ப்பாண மின்னகம்**

இல:141,மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-222 5766

இல:06,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-222 2353

(சி-10178)





தங்க வேலோன் தேரேறி உலாப்போகும் நேரம்- எங்கள்
தமிழினத்தின் தலையாவும் நிமிர்கின்ற காலம்: வீரம்
பொங்கி வரும் வேளையிலே வேலுக்குண்டு வேலை - உடன்
பொசுங்கி விடும் கந்தனாலே கவலை எல்லாம் நாளை.

யாழ்ப்பாணம்- சுன்னாகம் பழரசத் தொழிலகம்

**ஜசுபி தயாரிப்புக்கள்**

மாம்பழகோடியல்
பழக்கலவை கோடியல்
தேசிக் கோடியல்

உள்ளூர்
பழத்தில் இருந்து
முற்றிலும் சுகாதார
முறையில்
தயாரானது

நெல்லி ரசம்
மாம்பழ ஜாம்
விளாம்பழ ஜாம்
ஸ்ரோபரி ஜாம்
பழக்கலவை ஜாம்

தக்காளி சோஸ்
மிளகாய் சோஸ்

மாமபழ சட்னி, தேசி ஊறகாய்
மோர் மிளகாய்


(சி-10179)




எமது உற்பத்திப்பொருட்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சுன்னாகம்
ப.நோ.கூ.சங்கம்.
TP 0602-212380
0602-212813
ஜசுபி தொழிலகம்
உடுவில்.

# ...ரர் கந்தசுவாமி கோவில்
# ...றப்பிதழ் - 13-09-2004



## ...லைக்கந்தன்

...ஆலயம் தான் எம்மனக்கண் முன்னே

...விண்ணோர் சிறை மீட்ட
...க்கைவேல்-வாரி
...வல் சூர்மார்பும் குன்றும்
...ட துணை"

...லே இருப்பது வேல், இது ஞானசக்தி
...கயை வெல்ல ஞானவேல் தாங்கியுள்ளவன்
...க்தர்களுக்கு வலப்புறத்தும், இடப்புறத்தும்,
...தி இரவு பகலில் துணையாக விளங்குவது
...ாதர்.

...ல் வேல் என்கிறார் குமரகுருபரர். எங்களுக்கு
...தவது வேல். அந்த வேலை வணங்குவதே
...ற்றி வேலி... துன்பம் துடைக்கப்பெற்ற

...ன்றப்போர் செய்ததுவும்
...த்ததுவும்-நின்றென்னை
...கற்பொதும் பிற்காத்ததுப்
...ல்" என்கிறார்.


...பெருமை...ளத் தன்னகத்தே கொண்ட
...வாமிக் கோவில் மூலஸ்தானத்தில் உள்ளது.
...மையும் கருணை அனைவராலும் விரும்பி
...வரெவர்க்கு எவ்வெவ்வாறெல்லாம் அருள்
...ா உள்ளம் கொண்ட கலியுக வரதன் கந்தக்
...ள இயல்புகளெல்லாம் கொண்டு
... விளங்குபவன் ஆறுமுகன். அடியவர்கள்
...ம் வேலோடும் மயிலோடும் தோன்றி அருள்
...முகங்களையுடைய சிவப்பரம்பொருளினால்
...முகன்.

...லும் பாடி வழிபடலாம். கொடுந்தமிழாலும்
...ல வைது-நிந்தித்து பாடினாலும் அதனைப்
...ன் முருகன். இதனாலேயே "முத்தமிழால்
...வப்போன்" என்கின்றார் அருணகிரிநாதர்.
...தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால்
...தி அடைவர்" என்று கந்தபுராணம் பாடிய
...ர் கூறுகின்றார். சிவபெருமானது
...கினிப்பொறியாகச் சரவணப்பொய்கையிலே
...யவள் பரிந்தெடுத்து அணைத்துத் தாயாகி
...ப கந்தனெனும் மைந்தனைத் தந்தருளினாள்.

...த் தன்னக...த கொண்ட நல்லைக் கந்தன்,
...த்தேரிலே பவனி வரும் திருக்காட்சி
...கின்றது. அஞ்சேலென அபயந்தந்து கந்தன்
... பஞ்சம், பிணி, பகையெல்லாம் போக்கிட
...ிருத்தேர் ஏறி வெஞ்சமரை நிறுத்தி
...ர வேலேந்தி மயிலேறி நல்லைக் கந்தன்
...லோககைலாசமாகவே காட்சிதருகின்றது.
...ாகவே காட்சி தருகின்றது. தீர்வொன்றுக்காக
...ல் தீர்வு தர நல்லூர் கந்தன் தேரேறி

*...கவிமாமணி மதுரகவி காரை எம். பி. அருளானந்தன்*
*(ஆசிரியர் யா. ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்)*
*செயலாளர் சைவத்தமிழர் பண்பாட்டுக்கழகம்*

## அழகன் அருள் பெற அருந்தமிழ் ஏத்து!



நல்லையன் நல்ஜயன்! நாடறியும் நிச்சயமாய்!
இல்லைத் தமிழனிங் கென்றாக்க- வல்லெரியைக்
கொண்டு கிளம்பும் கொடியர் குலமடங்க
மண்டனல் வேல் செய்யும் வழி!

முன்தோன்றி மூத்த முருகுத் தமிழ்ச்சங்க
அன்றை முதல் தலைவா! அத்தமிழும் - உன்றன்
அடியர் தொழுகைக் குரியதென்றன்னார்
முடிவெடுக்க வைப்பாய் முனைந்து!

முத்தமிழாய் வாழ்வோர்க்கும் முத்தி கொடுப்போன் நீ!
முத்தமிழ்க்காய்ச் செத்து முடிந்தோர்க்கும் - முத்தி
கொடுப்பாய்! கொடுவென்று கும்பிடுதல் கூட
அடைவிக்கும் முத்தி அகம்!

கேடும் நலமும் கிடைக்கா பிறராலே!
தேடிநல்ல செய்தாலே சேர்ந்திடலாம் - பீடு மிகு
நல்வாழ் வெனும் பண்டை நம் கொள்கை மீளவுமே
புல்லவைப்பாய் நம்மோர் புரிந்து!

ஆரியச் சக்கர வர்த்திகள் ஆண்டிருந்த
சீரியதாம், நாவலனாம் சிங்கத்தை - கூருமருள்
ஆதீனத் தைத்தந்த அப்புகழ் நல்லை போல்
ஈதீழம் முற்றோங்கு வி!

- ச.வே. பஞ்சாட்சரம்


நல்லை நகராளும் நாயகனே! உன் அருள்
எல்லோருக்கும் கிடைத்திடஉன் தாழ்
பணிந்து நிற்கின்றோம்.

ரீ.வி, டெக், ரேடியோ, மணிக்கூடு, அழகு சாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளஅன்றும் இன்றும் என்றும் நன்மதிப்பை பெற்று விளங்கும் ஒரே ஸ்தாபனம்.

**ராஜு ஸ்ரோர்ஸ்**

இல:67,69 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P-0094-21-2225224
190 நாடுகளில் இருந்து விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்

WESTERN UNION | மனி டிரான்ஸ்ஃபர் SM
உலகெங்கும் பணத்தை பெற விரைவான வழி. SM

பணம் மாற்றும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படும். (சி-10173)

தந்தைக்கு உபதேசம் சொன்ன
தங்கவேலோன் தங்கரதம்
மீதேறிவரும் நன்னாளில்
தமிழரெல்லாம் தலைநிமிர்ந்து
வாழபிரார்த்திக்கின்றோம்.

நயம்! நாணயம்!! உத்தரவாதம்!!!

**சிறி கருமாரி நகையகம்**

அசல் 22 கரட் தங்கத்தில்
காலத்திற்கும் கருத்திற்கும் உகந்த
நவீன டிசைன்களில் தங்க நகைகளை
பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்

இல: 177-D, கஸ்தூரியார்வீதி,
(வின்சர் தியேட்டர் முன்பாக
யாழ்ப்பாணம்.
T.P.021-2225385 (சி-10172)

வண்ண அருளொளிவீசித் தேரில்
வலம்வரும்எழில் குமரனின் அருள்
எல்லோர்க்கும் கிடைத்திட
பிரார்த்திக்கின்றோம்.

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள்
கூறைச் சேலைகள்
பட்டு வேட்டிகளுக்கு
யாழ்நகரில் கைராசியான நிறுவனம்



**சீமாட்டி புடைவைக்கடல்**

122,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி-10171) T.P-021-2222196

...பிரார்த்திக்கின்றோம்.

...சைக்கிள்கள் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள், பற்றரி வகைகள்
...த்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**...மோட்டோர்ஸ்**

யாழ்ப்பாணம்.

**...றேடர்ஸ்**



...யாழ்ப்பாணம்.

தமிழ்க்கவிதை தனிற்பிறந்த தலைவாபோற்றி!
தனைவணங்கும் யாவர்க்கும் அருள்வாய் போற்றி!

பசுவதை ஒழிப்போம்!
கோமாதா எங்கள் குலமாதா!
வாழ்க பசுக்கள்!
வாழ்க இடபங்கள்!
வளர்க மானிடம்!
மானிடரே சிந்தியுங்கள்!
செயற்படுங்கள்!!



**வேணி களஞ்சியம்**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-222 2661,021-2222046 (சி-10170)




# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்






நல்லை வீதியிலே இன்று தேரேறி வரும் கந்தனே!
உன் அருள் அனைவருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்!

சுத்தமாக பொதிசெய்யப்பட்ட மளிகைப்பொருட்கள்
ஐஸ்கிறீம் வகைகள்
இறக்குமதி செய்யப்பட்ட பழவகைகள்,பழரசங்கள்
மருந்துவகைகள்
அழகுசாதனப்பொருட்கள்
நங்கையர் விரும்பும் கண்கவர் தங்க நகைகள்
பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள்
பாடசாலைப்பொருட்கள்

கடன்அட்டை(Credit Card) மூலம்
பொருட்களைக்கொள்வனவு செய்யும் வசதி

தரமான பொருட்களை ஒரே கூரையின் கீழ் பெற்றிட...

**அன்னைநாகா புட்சிற்றி**

175,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 - 2225515




(சி-10155)

சித்திரத்தேரில் வலம் வரும் சிங்கார வேலனே! தேரேறி வந்து எமக்கொரு தேசம் தருவாயா!






கொள்ளை எழில்
நல்லூரில்
குடியமர்ந்த
குருபரனே!
இன்று தேரிலேறி
அடியவர்கள்
அனைவருக்கும்
அருள் பாலித்திட
பிரார்த்திக்கின்றோம்.




நங்கையரின் மனம் விரும்பும் வடிவங்கள்
தரம் குன்றா தங்கநகைகள்
தங்கநகை உலகில் தமக்கென
தனியிடம் பதித்தவர்கள்.

**கணேசா நகையகம்**

123, பஜார் வீதி, வவுனியா.
தொ.பேசி: 024-2222464


கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP - 021 222 5987 (சி-10156)

யாழ் கணேசா நகையகம்
124, செட்டியார் தெரு,
கொழும்பு- 11.
T.P- 011-2336252



# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்




தேரேறும் திருக்குமரன் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

தரம் குன்றா தங்கப்பவுண் நகைகளை
செய்து பெற்றிட வாரீர்.

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்.

**அசோகா நகை அகம்**

**தங்கப்பவுண் நகை வியாபாரம்**

111, கஸ்தூரியார் வீதி, (சி-10191) T.P-021-2226290 யாழ்ப்பாணம்.

பாரெங்கும் முருகன் புகழ் பாடவேண்டும்! எங்கள் திருக்குமரன்
நல்லருள் அனைவருக்கும் கிடைக்கவேண்டும்!!.

அச்சகபேப்பர் வகைகள்,
அச்சக மை வகைகள்,
காகிதாதிகள்,
அலுவலக உபகரணங்கள்
இவை அனைத்தையும் நீங்கள் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

**அற்புதா ரேடிங் கொம்பனி**

இல: 198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-10192) T.P-021-222 2505

எங்கள் அவலங்களைப் போக்க அலங்காரத்
திருத்தேரில் பவனி வருக!

**லலிதாஸ் ரெக்ஸ்**

உங்களின் ஜவுளித் தேவைகளுக்கும் திருமணப்
பட்டுப் புடைவைகளுக்கும் தலைசிறந்த ஸ்தாபனம்.



இல: B3, சந்தை வீதி,
வவுனியா.
T.P-024-2221773

இல: 5,6 புதியசந்தை,
யாழ்ப்பாணம்.
T.P-021-2225260
(சி-10193)

ஆறுமுகனின் நல்லருள்
அனைவருக்கும்
கிடைப்பதாக!

புதிய வடிவமைப்பில் நவீன
கண்ணாடிகளைப்பெற்றிட.......

முக அமைப்பிற்கேற்ப சங்குப்பற்களைப் பொருத்திட...
மிதப்புப்பற்களுக்குக் கிளிப் பொருத்திக் கொள்ள
கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்.

**எரிக்கணேஷ்**

பல்கட்டும் இடமும்
மூக்குக் கண்ணாடி
அகமும்

564, 566. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
கிளைகள்:
சுன்னாகம்,
கொக்குவில் சந்தி.
(சி-10194)

தேரேறி வரும் முருகனே!
எங்களைக் காத்திடையா!

ஓடர் நகைகள் குறித்த தவணையில் 22 கரட்
தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்.

**சிறிமாரி**
**நகைமாடம்**

**தங்க வைர நகை வியாபாரம்**

இல:49, கே.கே.எஸ் வீதி,
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.

T.P- 021-222 7164 (சி-10195)



தேரில் வலம் வரும் வண்ணக்குமரனருள்
அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.
சுபமுகூர்த்தப்பட்டுப் புடைவைகளின்
மகத்தான தரமான தெரிவுகளுக்கு

**மகாசில்க்ஸ்**

இல: 32, 40A, நவீன சந்தை,
(உட்புறம்) யாழ்ப்பாணம்.
T.P-021-2227359

**பியூட்டி சில்க்ஸ்**



இல:69, நவீன சந்தை,
(உட்புறம்) யாழ்ப்பாணம்.
T.P-021-2227359
(சி-10196)




வண்ணமயிலேறி வரும் திருக்குமரனை
பிரார்த்திப்போமாக!

- மின்சாதனங்கள்
- மின் இணைப்பு உபகரணங்கள்
- அன்டன் பி.வி.சி குழாய்கள்
- அபான்ஸ் ஸ்தாபனத்தின் உற்பத்திப்பொருட்கள்
- தொங்கவிடும் மின்விளக்குகள்
- சுவர் விளக்குகள்

இவையனைத்தையும்
தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள

**சுந்தர்சன்**

மத்திய சந்தை முன்பாக, பிரதான வீதி,
மானிப்பாய்.
T.P-021-222 2751 (சி-10197)

ஓராறு முகம் கொண்டு
உலகை ஆளும் திருக்குமரா!
ஈராறு கரமதாலே எங்களை
தினம் காத்திடுவாய்!

யாழ் நகரில்
மக்கள் போற்றும்
மகத்தான ஜவுளிகளின்
சங்கமம்



**சிவகணேசன்**
**ரெக்ஸ்ரைல்ஸ்**

41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-10198) T.P-021-2222063



# நல்லூர் கந்தசுவாமி கோவில்

## தேர்த்திருவிழாச்சிறப்பிதழ்




நல்லைக்கந்தனே! தேரிலேறி வந்து எங்களைத் தினம் காத்திடுவாய்

சிவனருட்செல்வன் அரிசி ஆலை

உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.

சம்பந்தன் அரிசி ஆலை

இல.98,ஸ்கந்தபுரம்

(சி-10190)










இன்று தேரில் பவனி வரும் ஞானக்குமரனின் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

இலத்திரனியல் பொருட்கள்,
மின்சாரப்பொருட்கள்,
இறக்குமதியாளரும்
விற்பனையாளரும்

புத்தொழில் மின் களஞ்சியம்

இல.442,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 -222 2032 (சி-10189)







முருகனே! முத்துக்குமரனே! தேரிலேறி வந்து எங்களைத் காத்திடுவாய்!

சிறியோர் முதல் பெரியோர் வரை யாவரும் விரும்பி அணியும் அசல் 22 கரட் தங்க ஆபரணங்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

மைதிலி நகைமாடம்

இல:89, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021-222 7772, 021-222 5511 (சி-10188)





தொல்லைவினை தீர்க்கும் நல்லைக்கந்தனே! தேரிலேறி வந்து எங்களைத் தினம் காத்திடுவாய்

அசல் 22 கரட் தங்கத்தில் தரமான தங்க நகைகளுக்கு கிளிநொச்சி நகரில்...

மணி ஐயப்பா நகைமாடம்

யாழ்சாலை, (ஈழநாதம் பணிமனை முன்பாக)
கிளிநொச்சி.

தொ.பே: 021- 228 5981 (சி-10187)





எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தேரிலேறி வரும் நல்லைக்கந்தனின் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபத்தினரின்

மாபெரும் பரிசுத்திட்டம் அறிமுகம்





வாடிக்கையாளர் அட்டை மூலம்
பல பரிசுகளை வெல்லும் அரியவாய்ப்பு!

வணிக நிறுவனங்கள் எதிலும் இல்லாத
இவ் அரிய வாய்ப்பை தவற விடாதீர்கள்!

★இவ் அட்டை மூலம் 10000/= பெறுமதியான பொருள் கொள்வனவு செய்தவுடன் அப்பெறுமதியின் 5% கழிவை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

இவ் அட்டை பெறப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடகாலத்திற்கு செல்லுபடியாகும்.

★குலுக்கல் பரிசாக 10000/= ரூபாய் கொள்வனவு (பகுதிபகுதியாகவோ, ஒரே தடவையிலோ)நிறைவு செய்யப்பட்ட அட்டையின் இலக்கங்கள் நான்கு மாதத்திற்கு ஒரு தடவை குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு முதலாவது பரிசாக ஒரு பவுண் தங்க நாணயம் வழங்கப்படும்.

★இவ்வட்டை ஒரு வருடம் பூர்த்தியாகும் வரைக்கும் குலுக்கல் எண்ணுடன் சேர்க்கப்படும்.
★பரிசில் வழங்கப்பட்ட எண் அட்டை மீண்டும் குலுக்கல் எண்களுள் சேர்க்கப்படமாட்டாது.
★இவ் வாடிக்கையாளர் அட்டை 30.09.2004 வரைக்கும் வழங்கப்படும்.
★இவ் அட்டை மொத்தவியாபாரத்திற்கு வழங்கப்படமாட்டாது.

எமது காட்சியறை முற்றிலும் குளிரூட்டப்பட்டது.

★ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை,
கிளிநொச்சி.

T.P. 021-2285971
(சி-10186)

SM Graphics



வண்ணத் தேரிலேறி நல்லைநகர் வீதியிலே பவனிவரும் அழகுக்குமரனின் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.



சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்

எமது காட்சியறையில்!!
உங்கள் தெரிவுகள்!!

நாயகி கட்டடம்,
யாழ்சாலை,
பரந்தன்,
கிளிநொச்சி.



எமது வாணிபத்தில் கொள்வனவு செய்யும் அனைத்து உந்துருளிகளுக்கும் கணினி முறையில் நவீன சாதனங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்படும்.

(சி-10191)


## கடந்த வாரத்தில்

**02.09.2004-08.09.2004**

### 02

*இரண்டாவது தடவையாக மலேசியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு அஞ்சலுறையில் மர்மப்பொடி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

*ஊழல் குற்றச்சாட்டின் பேரில் மலேசியாவின் முன்னாள் துணைப்பிரதமர் அன்வர் இப்ராஹிம் ஆறு ஆண்டுகள் சிறையின் பின்னர் விடுதலை.





*அமெரிக்காவைப் பாதுகாப்பதில் தான் ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லையென்று குடியரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் கருத்து.

*சேது சமுத்திரத் திட்டத்தை ரூ.2000 கோடி செலவில் நிறைவேற்ற இந்திய மத்தியரசு ஒப்புதல் அளித்துவிட்டதாக நிதியமைச்சர் ப.சிதம்பரம் அறிவிப்பு.

### 03

ரஷ்யாவின் பெயிலாந் நகரில் பாடசாலை ஒன்றில் தீவிரவாதிகளினால் பணயம் வைக்கப்பட்டோரை மீட்கும் ரஷ்யப்படையினரின் நடவடிக்கையில் சிறுவர்கள் உட்பட 332பேர் பலி. 180 பள்ளிச்சிறுவர்கள் உட்பட 700பேர் காயமடைந்தனர்.




*சூடானிய அரசு தொடர்ந்தும் மனிதப்படுகொலையில் ஈடுபட்டு வருவதன் காரணமாக ஐ.நா.சபையில் சூடானுக்கெதிராக புதிய தீர்மானமொன்றை அமெரிக்கா கொண்டு வருமென்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் அறிவிப்பு.




*இந்தியாவின் புதிய அரசின் முன்னாள் மத்திய அமைச்சர் சிபுசோரன் பிணையில் விடுதலை.

### 04

*ஈராக்கின் கிர்குக் நகரில் தற்கொலைக் குண்டுதாரியால் மேற்கொள்ளப்பட்ட கார்க் குண்டு வெடிப்பில் 20 பேர் பலியானதோடு, 35 பேர் படுகாயமடைந்தனர்.




*பொடோ சட்டத்தை வாபஸ் பெறுவதற்கு விரைவில் அவசர சட்டமொன்று பிறப்பிக்கப்படுமென்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அறிவிப்பு.

### 05

*ஜப்பானிலுள்ள டோக்கியோவில் 6.8 ரிக்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டதன் காரணமாக பல பாதிப்புக்கள் இடம்பெற்றுள்ளது.

*பணயக் கைதிகளாகத் தடுக்கப்பட்ட 12 நேபாளப் பிரஜைகளின் படுகொலையின் பின் நாட்டில் ஏற்பட்ட கலவரத்தை அடுத்து தலைநகர் காத்மண்டுவில் சமாதான ஊர்வலம் இடம்பெற்றது.

*பாகிஸ்தானில் இருந்து இந்திய எல்லைக்குள் தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க வேண்டுமென்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சரிடம் நட்வர்சிங் வலியுறுத்து.

*ஈராக்கிய தீவிரவாதிகளின் முக்கிய நபரான இம்ராகும் அல்தூரியைப் பிடிக்க ஈராக்கியர், அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது 12 பொலிசார் உட்பட 80 பேர் கொல்லப்பட்டும், 580 பேர் கைது செய்யப்பட்டனர்.

*இந்திய-பாகிஸ்தான் நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர் மட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாகியது.

*பலஸ்தீனத்தின் மேற்குக் கரையிலுள்ள முக்கிய பகுதியான ஹெப்ரானில் புதிய தடுப்புச் சுவரை அமைக்கும் பணியை இஸ்ரேல் ஆரம்பித்துள்ளது.

### 06

*தென்மேற்கு சீனாவில் கடும் மழையுடன் கூடிய புயற்காற்றினால் 90 பேர் உயிரிழந்ததுடன் 77 பேர் வரை காணாமற் போயுள்ளனர்.




*பாகிஸ்தான் நாட்டின் இராணுவ தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இதன் போது எந்தவொரு நாட்டின் தாக்குதலையும் சமாளிக்க பாகிஸ்தான் இராணுவம் தயாராகவிருப்பதாக சனாதிபதி பர்வேஷ் முஷாரப் சூளுரை.

*சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக ரஷ்யாவும், இஸ்ரேலும் கூட்டுப் போராட்டத்தை மேற்கொள்ளும் வகையில் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர் கிலால்ரோவும், இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சில்லன் சல்மும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

*பாக்தாத்தில் அமெரிக்க இராணுவ அணிமீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைப் படைத்தாக்குதலில் 07 அமெரிக்கப் படையினரும், 3 ஈராக்கிய படையினரும் பலி.




*சிரியாவின் தூண்டுதலுடன் அரசியல் யாப்பை மாற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகளைக் கண்டித்து 4 லெபனான் அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனர்.

*ரஷ்யாவின் பொஸ்லான் நகரில் கோரச் சம்பவம் நடந்த பாடசாலையை (பணயக் கைதிகள் மீட்பு) நினைவாலயமாக்க ரஷ்ய அரசு முடிவு.




### 07

*ஈராக்கில் மனித நேயப் பணிகளில் ஈடுபட்டிருந்த இரண்டு இத்தாலியப் பெண்கள் உட்பட நான்கு பேர் ஈராக் தீவிரவாதிகளால் கடத்தல்.

*பலஸ்தீன தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் மீது இஸ்ரேல் இராணுவத்தினர் மேற்கொண்ட குண்டுவீச்சு தாக்குதலில் 13 பேர் உயிரிழந்ததுடன், 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.




*ஈராக்கின் பலூஜாவில் அணிவகுத்துச் சென்று கொண்டிருந்த அமெரிக்கப் படையினர் மீது தீவிரவாதிகள் நடத்திய வெடி குண்டுத் தாக்குதலில் 06 அதிரடிப்படை இராணுவத்தினர் உடல் சிதறிப்பலி.




### 08

*நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதத் தாக்குதல்களை கட்டுப்படுத்த இந்தியாவிடமிருந்து தமது நாடு அதிகளவு உதவிகளை எதிர்பார்ப்பதாக நேபாளம் அறிவிப்பு.

*இந்தியா பாகிஸ்தான் கூட்டறிக்கையொன்றினை வெளியிட்டது. இதில் 13 நம்பிக்கை நடவடிக்கைகள் பற்றிப் பேச முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# பம்பைமடுக் காவலரணில் இராணுவச் சிப்பாய் தற்கொலை

(செட்டிகுளம்)

வவுனியாவில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தற்கொலை புரிந்துள்ளார். வவுனியா மன்னார் வீதியில் 5 ஆவது கிலோ மீற்றரில் அமைந்திருக்கும் பம்பைமடு என்ற இடத்தின் 217 ஆவது பிரிகேட்டில் நேற்று முன்தினம் காலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்தவர் 27 வயதான கண்டி மணிடிவெல என்ற இடத்தைச் சேர்ந்த விஜயக்கோன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் விசாரணைகளினை மேற்கொள்ளுமாறும் பிரேத ப்ரிசோதனையின் பின்னர் உறவினர்களுக்கு சடலத்தினை ஒப்படைக்குமாறும், பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். காலை 5.30 மணிக்கு இரண்டாவது முன்னரங்க காவல் நிலைப் பகுதியில் மூன்று பேர் காவலில் நின்றுள்ளனர். இருவர் ஓய்வு எடுத்த சமயம் மேற்படி நபர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. நீதவான் சடலத்தினைப் பார்த்தபோது குப்புறப் படுத்தப்படி ரி-56 ரக துப்பாக்கி தயாரான நிலையிலும் இருந்துள்ளது. துப்பாக்கியின் மகசீனில் 28 ரவைகளும், துப்பாக்கி ஷேம்பரில் ஒரு ரவையும் மீட்கப்பட்டுள்ளது. ஒரு ரவை, மூலமே சுட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறந்த இராணுவச் சிப்பாயிடம் இருந்த சிறியபேஸ், காதல் கடிதம் என்பனவும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் இறந்த சிப்பாய் கடந்த ஒன்றறை மாதத்திற்கு முன்னரே தனது எட்டுமாதப் பயிற்சியை முடித்துவிட்டு பணியாற்றி வந்துள்ளார். எதிர்வரும் 15 ஆம் திகதி மரண விசாரணை இடம் பெறும் என்றும், இதில் கூட இருந்த இரண்டு சிப்பாய்களும் பொறுப்பதிகாரியும், தாய், தந்தையர், இயலுமாயின் காதலி ஆகியோரை வவுனியா நீதிமன்றுக்கு வருமாறு வவுனியா மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார். (21)

## பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

விசுவமடுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைகளின் சங்கம நிகழ்வு அண்மையில் றெட்பானா மு/பாரதி வித்தியாலய மண்டபத்தில் பிரதேச தே.எ.பே.செயலாளர். டாக்டர் வ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் பொதுச் சுடரை மாணிக்கபுரம் கிராம சேவகர் பொ.சுந்தரலிங்கம். கிராமசேவகர் த.ஜெயதாஸ் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழ தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர். திலகன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து கருத்துரைகளை கிளி/மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், பிரதேச. தே.எ.பே. செயலாளர், கிளி/மாவட்ட தே.எ.பே.பொறுப்பாளர், திருமாறன், பிரதேச த.பொ.மே.நிறுவன இணைப்பாளர் கார்த்திக், இளங்கோபுரம் கிராமசேவையாளர் மாசிலாமணி ஆகியோரும் நிகழ்த்தினர். (14)

-முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில்-

# பதில் வைத்திய அதிகாரி இல்லை நோயாளர் சிகிச்சையின்றி திரும்பல்

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி இன்றி கடந்த திங்கள் தொடக்கம் நோயாளர் அவலப்பட்டு வருகின்றனர். கடந்த 9ஆம் திகதி வரை இந்நிலை காணப்பட்டது. மேற்படி வைத்தியசாலை வைத்திய அதிகாரி வெளியிட பிரயாணத்தை மேற்கொண்டதை அடுத்து பதில் வைத்திய அதிகாரி நியமிக்கப் படாமையால் பெருமளவான நோயாளர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் அவல நிலையினை அவதானிக்க முடிந்ததுடன் பலர் முல்லைத்தீவு மாவட்ட வைத்திசாலைக்குச் சென்ற அதேவேளை மிகவும் வறுமைக்குட்பட்டவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று சிகிச்சை பெற முடியாமல் சிரமப்படுகின்றனர்..

இதேவேளை மேற்படி வைத்தியசாலையின் மத்தியமகப் பேற்று விடுதியில் நிறைமாத கர்ப்பிணித் தாய்மார்கள் ஐவர் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் வைத்திய அதிகாரி இல்லாத நிலையில் பதற்றப்பட்டதையும் சிலர் முல்லைத்தீவு , புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குச் செல்லத் தயார்படுத்தியதையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை முள்ளியவளைப் பிரதேசத்தில் செஞ்சிலுவைச்சங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த முதலுதவி ஆரம்ப சுகாதார நிலையங்கள் பல மூடப்பட்டுள்ளமையினால் மேற்படி வைத்தியசாலையில் கடந்த வாரத்தில் நோயாளர் தொகை அதிகரித்துக் காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

நோயாளர்கள் குமுழமுனை, தண்ணீரூற்று, வற்றாப்பளை, கேப்பாப்பிலவு, மாமூலை, குமாரபுரம், கூழாமுறிப்பு பகுதிகளில் இருந்து வைத்தியசாலைக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் அவல நிலையினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருத்தில் கொண்டு இயன்றவரை விரைவாகப் பதில் வைத்தியரை கடமையில் ஈடுபடுத்தி நோயாளரின் அவலத்தைத் தீர்க்க வேண்டுமென பலரும் எதிர்பார்க்கின்றனர். (ஆ)

## வீட்டுத்திட்டம்

(மன்னார்)

'சோபா' நிறுவனம் கடந்த போர்க் காலத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதியான மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள பரப்புக் கடந்தான் கிராமத்தில் வீடுகளை இழந்த வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் குடும்பங்களை இனங்கண்டு ஒவ்வொன்றும் 1இலட்சத்து 10ஆயிரம் ரூபாய் பெறுமதியான வீடுகள் கொண்ட வீட்டுத்திட்டத்தை நிர்மாணித்து வருகின்றது. (மி)

# பெண்கள் சுயதொழில் முயற்சிக்கான செயற்றிட்ட மீளாய்வுப் பயிற்சி நெறி

(அலுவலக செய்தியாளர்)

யு.என்.டி.பி நிறுவன உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பெ.அ.பு நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் பெண்கள் சுயதொழில் முயற்சிக்கான செயற்றிட்ட மீளாய்வுப் பயிற்சி நெறி அ.சா.நி இணைய மண்டபத்தில் அ.சா.நிறுவன நிர்வாக அலுவலர் சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பெ.அ.பு.நிறுவன இணைப்பாளர் மா.செல்வி திட்டம் சம்பந்தமான கருத்துக்களை வழங்கியதுடன். யு.என்.டி.பி பிரதிநிதி கலந்துகொண்டு தமது நிறுவனச் செயற்பாடு பயிற்சியின் முக்கியத்துவம் தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

இப்பயிற்சியில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பெ.அ.பு நிறுவன பணியாளர்கள் 25 பேர் கலந்துகொண்டதுடன் இப்பயிற்சி 9,10 ஆம் திகதிகளில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,தீ)

# வங்காலை கடற்கரையோரம் காவலரண்கள் அமைப்பு

(மன்னார்)

வங்காலையில் சிறிலங்கா படையினர் தமது பாதுகாப்பு அரண்களை புதிதாக நிர்மாணித்து வருகின்றனர்.

வங்காலை கடற்கரைக்கு அருகிலுள்ள படையினர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் இப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் கவலையடைந்துள்ளனர். (மி)

## வலம்புரிச் சங்கு கண்டெடுப்பு

(மன்னார்)

பள்ளிமுனை கடலில் கடந்த வெள்ளிக்கிழமை வடலி கடல் பிரதேசத்தில் பள்ளிமுனை மீனவர் ஒருவரும், பனங்கட்டுக்கொட்டு மீனவர் ஒருவரும், இரண்டு வலம்புரிச்சங்குகளை கண்டெடுத்தனர்.

ஒவ்வொரு வலம்புரிச்சங்கும் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியானது. (மி)

## பேருந்துகள் பழுது சேவைகள் நிறுத்தம்!

மன்னாரில் இலவச போக்குவரத்துச் சபையினரால் நடத்தப்படும் கொழும்பு-மன்னாரிற்கான நான்கு சேவைகளில் தற்போது ஒரு பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன.

பேருந்துகள் பழுதடைந்துள்ளமையால் அவற்றை திருத்துவதற்கு நிதியின்மையால் இவற்றின் சேவைகள் தற்சமயம் நிறுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதனால் மன்னார் மக்கள் தற்போது பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். (மி)

# திலீபன் நினைவு நாட்களை சிறப்புற அனுஷ்டிக்க ஏற்பாடு

(மல்லாவி)

தியாக தீபம் லெப்டினன்ட் கேணல். திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு தினத்தை மிகவும் சிறப்புடன் அனுஷ்டிப்பதற்கான கிராம ரீதியிலான கலந்துரையாடல் யோகபுரம் மத்தி மூவேந்தர் முன்பள்ளி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தேசிய எழுச்சிப்பேரவை உப செயலாளர் த.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் சிரமதானங்கள், வலய அடையாள உண்ணாவிரத நோன்பு நாட்களை அனுஷ்டிக்கவும் மிகவும் சிறப்புடன் நினைவு கூரவும் மக்கள் முன்வந்துள்ளனர்.

கருத்துக்களை துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் புனிதன் அரசியல் துறையைச் சார்ந்த பே.தனம் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வில் துணுக்காய் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் சசிக்குமார், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள் பலர் கலந்து சிறப்பித்தனர். (24)

# அலரிவிதை உட்கொண்டு குடும்பஸ்தர் மரணம்!

(முல்லை)

முல்லைத்தீவு கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் மதுபோதையில் அலரி விதை சாப்பிட்டு குடும்பஸ்தர் மரணமானார்.

கடந்த 9 ஆம் திகதி 5 பிள்ளைகளின் தந்தையான அடைக்கலநாதன்-ஜெயசீலன் (வயது-33) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

அதிகாலை 6.00 மணிக்கு கடற்றொழிலுக்காகச் சென்ற ஒருவர் கடற்கரையில் மரணமடைந்த நிலையில் இருந்த மேற்படி நபரைக் கண்டு அருகிலுள்ள முல்லை காவல் பணிமனையினருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற காவல் பணிமனையினர் சடலத்தை விசாரணையின் பின்பு மனைவியிடம் ஒப்படைத்து காவல் துறை தொடர் விசாரணையை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (20)

## குளங்களின் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்ட காணிகள் விற்பனை வவுனிக்குளம்

வவுனிக்குளத்தின் குளக்கட்டிற்கு அருகாமையில் உள்ள குளங்களின் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்ட காணிகள் அண்மையில் இடம்பெற்ற இடப்பெயர்வு களின் போது குடியிருந்தவர்கள் வெளி யேறிச் செல்லும் போது அக்காணிகளை இங்குள்ளவர்களுக்கு விலைக்கு விற்றுச் செல்வதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இக்காணிகளுக்கு எக்காரணம் கொண்டும் காணி அனுமதிப்பத்திரம் வழங்க நீர்ப்பாசனத் திணைக்களம் சிபார்சு செய்ய மாட்டாதது மட்டுமல்ல, இவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கு மாறு பிரதேச செயலாளர்கட்கு சிபார்சு செய்யும்.


எனவே இவ்வாறான காணிகளை விலைக்கு வாங்க வேண்டாமென அறிவுறுத்துகின்றோம்.

எந்திரி. வ.தவக்குமார்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
வவுனிக்குளம்.

(சி-10212)

# வீரவணக்கம்

## 3ஆம் ஆண்டு நினைவலைகளில்



| 2ஆம் லெப் | 2ஆம் லெப் | லெப் |
|---|---|---|
| இ.பாலகிருஷ்ணன் | இ.தமிழ்ச்செல்வன் | சோ.ஞானசேகரம் |
| இராமையா - பாலகிருஷ்ணன் | இராசு - தமிழ்ச்செல்வன் | சோமன் - ஞானசேகரம் |
| தாயின் மடியில் 05 - 07 - 1968 | தாயின் மடியில் 14 - 03 - 1974 | தாயின் மடியில் 14 - 07 - 1971 |
| தாயக மண்ணில் 13 - 09 - 2001 | தாயக மண்ணில் 13 - 09 - 2001 | தாயக மண்ணில் 13 - 09 - 2001 |
| நி.மு. யாழ். மாவட்டம் | நி.மு. யாழ். மாவட்டம் | நி.மு. யாழ். மாவட்டம் |
| த.மு. யூனியன்குளம்,கோணாவில் கிளி. | த.மு. உரும்பிராய் தெற்கு | த.மு. வன்னி. |

கடந்த 13.09.2001 அன்று மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தனர். இம்மாவீரர்களுக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்"

(5041)

# பயங்கரவாதத்தின் கொடூரத்தை எதிர்கொள்ள அனைத்து நாடுகளும் கூட்டாகச் செயற்பட வேண்டும்

## இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம்.



(புதுடில்லி)

**புத்தாயிரத்தில் பெரும் புதியசவாலாக அமைந்துள்ள பயங்கரவாதத்தின் கொடூரத்தை அனைத்து நாடுகளும் அறிந்துள்ளன என்றும், இந்தச் சவாலைச் சந்திக்க அனைத்து நாடுகளும் கூட்டாகச் செயற்பட வேண்டும் என்றும் இந்திய குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் கேட்டுக்கொண்டுள்ளார்.**

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் இந்தியா உறுதியாகவுள்ளது என்றும், இந்திய சனாதிபதி கூறியுள்ளார். அரசுமுறை வெளிநாட்டுப் பயணத்தில் தன்சானியா சென்றுள்ள இந்திய சனாதிபதி அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.நாடுகள்சபை சனநாயக ரீதியில் செயற்பட இந்தியாவும், தன்சானியாவும் கூட்டாகச்செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது என்றும், புதிய உலக நடைமுறைக்கு ஏற்ப ஐ.நா.பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்த, சனநாயகப் படுத்த வேண்டிய அவசியம் தற்போதைய நிலையில் எழுந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

தன்சானியாவில் கிடைக்கும் தாதுப்பொருட்களைக் கொண்டு தொழில்கள் தொடங்குவது உட்பட பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் இரு நாடுகளும் கூட்டாகச் செயற்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தன்சானியாப் பயணத்தை முடித்துக்கொண்ட அப்துல்கலாம் தென்னாபிரிக்காவுக்கு நேற்று பயணமாகியுள்ளார்.





டெல்லியில் நடந்த பா.ஜ மாநில முதல்வர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட வாஜ்பாய்க்கு சுஷ்மா சுவராஜ் மலர் கொத்து கொடுத்து பரிசளித்த போது எடுத்த படம், அத்வானி, வெங்கையா நாயுடு அருகில் உள்ளனர்.

## காஷ்மீரில் குண்டுவெடிப்பு ஒருவர் பலி; 16பேர் காயம்

வடக்கு காஷ்மீரின குப்வாராவின் முக்கிய சந்தைப்பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை குண்டு வெடித்தது. இச்சம்பவத்தில் ஒருவர் பலியானார். 16பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



சென்னையில் இருந்து லொரிகளில் கொண்டு வரப்பட்ட ஜெயலலிதா சொத்து குவிப்பு வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அடங்கிய சீல் வைத்த அட்டைப் பெட்டிகளை பெங்களூர் நகர சிவில் நீதிமன்றத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் இறக்கி வைக்கும் காட்சி.

## காஷ்மீர் பிரச்சினையை பாகிஸ்தான் கைவிடாது

### முஷாரப்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினையை பாகிஸ்தான் கைவிடாது என்றும், இந்த மாதம் நியூயோர்க் நகரில் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்துப் பேசும்போது அவரிடம் காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானின் நிலையை தெளிவாக தெரிவிக்க இருப்பதாகவும் அந்த நாட்டின் சனாதிபதி முஷாரப் கூறியுள்ளார். குவெட்டா நகரில் இராணுவ அதிகாரிகள் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்த அவர், பாகிஸ்தான் தனது அணுவாயுதத் திட்டங்களில் இருந்து பின்வாங்காது என்றும் கூறினார்.

## சுதந்திர இந்தியாவின் கறைபடிந்த தலைவர் முன்னாள் துணைப்பிரதமர் அத்வானியே

### -அமைச்சர் ஜெயபால் ரெட்டி

சுதந்திர இந்தியாவின் முதலாவது கறைபடிந்த அமைச்சர் என்ற. பெயரைப் பெற்றவர் பாரதிய ஜனதாவின் முன்னாள் துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி தான் என்று மத்திய தகவல் தொடர்பு மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் ஜெயபால் ரெட்டி குற்றம் சுமத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் அத்வானி மீதான குற்றச்சாட்டுக்களை மூடிமறைப்பதற்காக அரசியல் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதாகவும், வாஜ்பாய் அமைச்சரவையில் உமாபாரதியும், முரளிமனோகர் ஷோஷியும் இதுபோன்ற கறை படிந்த அமைச்சர்களே என்றும் அவர் கூறியுள்ளார்.

இப்பிரச்சினை பாரதிய ஜனதா கட்சி இரட்டைவேசம் போடுவதாகவும் அவர் குறை கூறியதுடன் பாரதிய ஜனதாவுடன் தோழமை பூண்டுள்ள ஜெயலலிதாவும் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளனவர் என்று கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினராகும் எவரும் அமைச்சராகக் கூடியவரே என்று கூறிய ஜெயபால்ரெட்டி ஊழல் புரிந்ததற்கும் மதக் கலவரத்தைத் தூண்டுவோருக்கும் இந்திய சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.


## எச்.ஐ.வி உயிர்கொல்லி நோயைக் கட்டுப்படுத்த இந்திய மருத்துவக் குழு புதிய கண்டுபிடிப்பு

எச்.ஐ.வி உயிர்கொல்லி நோய் எயிட்சைக் கட்டுப்படுத்தும் இரண்டு வகைத் தடுப்பூசிகளை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்குழு கண்டுபிடித்துள்ளது.

சென்னையில் நேற்றுமுன்தினம் தொடர்மருத்துவக்கல்வி நிகழ்வில் பேசிய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் தலைமை இயக்குனர் என்.கே.கங்குலி (A.E.V) ஏ.இ.வி எனும் புதிய வகைத்தடுப்பூசி மருந்தை ஒருமுறை பயன்படுத்தினால் நோயாளிமீது நோய் எதிர்ப்பு சக்தி ஓராண்டுவரை இருக்குமென்றுஏற்கனவே நடத்திய பரிசோதனைகளில் தெரியவந்திருப்பதாகக் கூறியுள்ளார்.

மற்றொருவகைத் தடுப்பூசியான எம்.இ.வி(M.E.V) மருந்தும் வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்க்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சென்னை மற்றும் புனை சோதனைமையங்களில் இந்தப் புது வகைத் 'தடுப்பூசி மருந்துகள்' உள்ளிட்ட ஐந்து வகைத் தடுப்பூசி மருந்துக்கள் மேலும் ஆய்வு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



வெளிநாடு செல்லும் சனாதிபதி அப்துல் கலாமுக்கு லல்லு வாழ்த்து தெரிவித்த காட்சி அருகில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் உள்துறை அமைச்சர் நட்வர் சிங்

## இந்தியாவின் ஆளும் அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பில் கவனம் செலுத்தவில்லை

### அத்வானி குற்றச்சாட்டு

(புதுடில்லி)

"மன்மோகன்சிங் அரசு நாட்டின் பாதுகாப்பில் கவனம் செலுத்தவில்லை" என்று அத்வானி குற்றம் சாட்டியுள்ளார்.பா.ஜனதா கட்சி முதல்-மந்திரிகள் 2 நாள் சிறப்புக் கூட்டம் நேற்று டெல்லியில் தொடங்கியது. எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் துணைப் பிரதமருமான அத்வானி இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியதாவது:-

நாட்டின் பாதுகாப்பில் மன்மோகன்சிங் தலைமையிலான மத்திய அரசு உரிய கவனம் செலுத்தவில்லை. பொடா சட்டம் ரத்து, மக்கள் போர்ப்படை தீவிரவாத இயக்கத் தடைநீக்கம் போன்ற நடவடிக்கைகளினால் மோசமான விளைவு ஏற்படும்.

'கலாசார தேசியம்'தான் பாரதிய ஜனதாவின் ஆணி வேரான ஜனசங்கத்தின் முக்கிய கொள்கை ஆகும். தேசப்பற்று தொடர்பான எந்த பிரச்சினைகளிலும் நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம்.

மக்கள் தொகைப் பிரச்சினை பற்றி நாங்கள் பேசினால், அதை நீங்கள் ஏன் வகுப்புவாத - மதவாத கண்ணோட்டத்தில் பார்க்கிறீர்கள்? மூவர்ண தேசியக் கொடி பற்றிப் பேசினாலும் அதையும் இதே கண்ணோட்டத்தில்தான் பார்க்கிறீர்கள் இதைத் தவிர்க்க வேண்டும்.

இந்தியா-பாகிஸ்தான் நல்லுறவுக்கு வாஜ்பாய்-முஷாரப் சந்திப்பைத் தொடர்ந்து சனவரி 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட இரு நாட்டுக் கூட்டறிக்கையின் அம்சங்களை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். 'கார்க்கில்' போருக்கு 'பின்னணி' யார் என்பதை அறிந்திருந்தும் முஷாரப்பை ஆக்ரா பேச்சு வார்த்தைக்கு அப்போது அழைத்தோம்.

சமீபத்தில் நடைபெற்ற 'சார்க்' மாநாட்டில், காஷ்மீரில் நடை பெறுவது பயங்கரவாதம்தான் என்றும், அதற்கு எல்லைக்கு அப்பால் இருந்து ஆதரவு கிடைத்து வருவதையும் முஷாரப் ஒப்புக் கொண்டார். இதை அவர் அப்போதே ஒப்புக்கொண்டிருந்தால் ஆக்ரா பேச்சுவார்த்தை தோல்வி அடைந்திருக்காது எனவும் அத்வானி தெரிவித்தார்.

## மாவோயிஸ்டுகளின் தீவிரவாத தாக்குதலைக் கட்டுப்படுத்த நேபாளத்திற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும்

### –இந்திய பாதுகாப்பு அமைச்சர்

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் வன்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அந்த நாட்டிற்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குமென்று இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிராணப் முகர்ஜி நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

அத்துடன் பங்களாதேஷ் எல்லையில் இருந்து இந்தியாவுக்கு எதிராக தீவிரவாதச் செயல்களில் ஈடுபடும் குழுவினர் மீது அந்நாடு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.


அத்துடன் இந்தியா- பாகிஸ்தான் இடையே பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினால் இரு நாடுகளின் பிரச்சினைகளுக்கு ஒரு சுமூகத் தீர்வு ஏற்படும் என்றும் பிராணப் முகர்ஜி கூறியுள்ளார்.

கல்கத்தாவில் பாதுகாப்புத் துறை செயலாளர்கள் பயிலரங்கம் ஒன்றை நேற்று முன்தினம் தொடக்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். எல்லையில் சண்டை நிறுத்தம் தொடரும் என்றும், இது இரு நாடுகளுக் கிடையேயும் அமைதிச் சூழலை ஏற்படுத்தும் என்றும் கூறியுள்ளார்.

பாகிஸ்தானுடன் அமைதியையும், நல்லுறவையும் பராமரிக்கவே இந்தியா விரும்புகின்றது என்று கூறிய அமைச்சர், சமீபத்தில் புதுடில்லியில் இரு நாடுகளினதும் வெளியுறவு அமைச்சர்கள், செயலர்கள் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இதனை வெளிப்படுத்தியுள்ளதாகக் கூறியுள்ளார்.

ICC CHAMPIONS TROPHY
ENGLAND 2004

12 TEAMS
15 MATCHES
16 DAYS
ONE WINNER



மினி உலகக் கிண்ண போடடியில் தென்னாபிரிக்கா-பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நேற்று எட்ஸ்பாஸ்டன் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றியை பெற்றது.

## பங்களாதேசிற்கு எதிரான போட்டியில் தென்னாபிரிக்க அணிக்கு இலகுவான வெற்றி

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது.

இவ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் தென்னாபிரிக்க வேகப் பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாது மளமளவென ஆட்டமிழந்தனர்.

இறுதியில் 31.3 ஓவர்களில் 93 ஓட்டங்களை மாத்திரம் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.





துடுப்பாட்டத்தில் நபீஸ் இக்பால் 40 ஓட்டங்களையும், மசூட் 24 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர்கள் நால்வர் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் மிகச் சிறப்பாக பந்து வீசிய லாங்வெல்ட் 17 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும், நிற்றினி 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நிக்கிபோயே 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இலகுவான வெற்றி இலக்கை நோக்கி ஆடிய தென்னாபிரிக்கா 17.4 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் சிமித்42 ஓட்டங்களையும், கலிஸ் 40 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.

வீழ்த்தப்பட்ட ஒரு விக்கெட்டை பங்களாதேசின் ஆரம்பப் பந்து வீச்சாளர் குசைன் கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக லாங்வெல்ட் தெரிவானார்.

சிறிலங்கா அணிக்கு எதிரான ஐந்து ஒரு நாள் போட்டியில் தொடர் தோல்வியைச் சந்தித்த தென்னாபிரிக்க அணிக்கு மேற்படி வெற்றி உத்வேகம் அளிப்பதாக இருக்கும். மினி உலகக் கிண்ணத்துக்கான இன்றைய போட்டியில் பலமான அவுஸ்திரேலிய அணி பலம் குன்றிய அமெரிக்க அணியை எதிர்கொள்கிறது.



## வீரர்களின் எதிர்வு கூறல்

**இந்திய முன்னாள் விக்கெட் கீப்பர் பரோக் இன்ஜீனியர்**



சிறிலங்கா, அவுஸ்திரேலிய அணிகள் இந்த வருடம் சிறபபாக விளையாடியுள்ளன. இருந்தாலும் இங்கிலாந்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. அது பலமான அணியாக இருக்கிறது. சச்சின் இல்லா விட்டாலும் இந்தியாவுக்கும் வாய்ப்பு இல்லாமலில்லை. பாகிஸ்தான் அதை விட சிறந்த அணியாகத் திகழ்வதைக் காணலாம் என முன்னாள் இந்திய விக்கெட் கப்பர் பரோக் இன்ஜினியர் கருத்து வெளியிட்டுள்ளார்.

**பாகிஸ்தான் முன்னாள் தலைவர் அசிப் இக்பால்**

போட்டிகளின் தன்மைக்கேற்ப ஒரு அணிவெற்றி பெறும் போது முடிவைத் தன்வசப்படுத்தலாம். ஆனால் முடிவு பற்றி தெளிவாகக் கூறமுடியாது. ஆயினும் இந்திய பாகிஸ்தான் அணிகளில் ஒன்றும் அவுஸ்திரேலியா நியூசிலாந்து அணிகளில ஒன்றும் இறுதிப் போட்டிக்கு வரலாம்.



**ஜஸ்ரின் லாங்கர் (அவுஸ் டெஸ்ட் வீரர்)** பலதரப்பட்ட கருத்துக்கள் கூறப்பட்டாலும் அவுஸ்திரேலிய அணியே கிண்ணத்தைக் கைப்பற்றும் றிக்கி பொண்டிங்கின் தலைமைத்துவம் வெற்றி யின் உச்சிக்கே இட்டுச் செல்லும்.

**கிரேய்க் (முன்னாள் இங்கிலாந்தின் சகலதுறை வீரர்)**



அவுஸ்திரேலியா போட்டியை வென்று கிண்ணத்தைக கைப்பற்றுவது உறுதி. எனினும எனது எண்ணம் பிளின்டொப் உலகில் தலை சிறந்த வீரராகக் காணப்படுவதால் ஹார்மிஸனுடன் இணைந்து செயற்படும்போது வெற்றி இங்கிலாந்துக்குக் கிடைக்கலாம்.

## முந்தைய போட்டிகளின் தோல்வி ஐ.சி.சி போட்டியில் பிரதிபலிக்காது — கங்குலி



முந்தைய போட்டிகளின் தோல்வி எந்த வகையிலும் ஐ.சி.சி சம்பியன் கிண்ண போட்டியில் பிரதிபலிக்காது. நடக்க இருக்கும் பாகிஸ்தானுடனான போட்டி சவாலாக இருக்கும் என் பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் யாருக்கு சாதகம் என்பதைக் கூற முடியாது என இந்திய அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

கடைசியாக பாகிஸ்தான் அணிக்கு எதிராக தொடர்ச்சியாக இரண்டு போட்டிகளில் தோல்வியடைந்துள்ள இந்தியா இந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் மாத்திரமே அரையிறுதி வாய்ப்பை எட்ட முடியும்.


இதேவேளை கென்யாவுடனான போட்டியில் இரண்டு ஓட்டங்கள் எடுத்த போது கங்குலி ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்களை குவித்தவர்கள் பட்டியலில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறினார். இவர் 216 போட்டிகளில் 9789 ஓட்டங்களை குவித்துள்ளார். முதல் இடத்தில் டெண்டுல்கரும் (13415 ஓட்டம்), இரண்டாம் இடத்தில் இன்சமாமும் (9977 ஓட்டம்) உள்ளனர்.

## நட்சத்திர வீரர் டெண்டுல்கருக்கு அதி நவீன சிகிச்சை அளிக்க முடிவு

முழங்கையில் ஏற்பட்ட வலியால் அவதிப்பட்டு வரும் டெண்டுல்கருக்கு அதி நவீன சிகிச்சை அளிக்க இந்திய கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது.

ஆசிய கோப்பை கிரிக்கெட் முடிந்த பின்னர் இந்தியக் கிரிக்கெட் நாயகன் டெண்டுல்கர் சாம்பியன் கோப்பை போட்டிக்காக தீவிர பயிற்சி மேற்கொண[illegible]. இங்கிலாந்து போன்ற ஆடுகளங்களில் பவுன்சர் பந்துகளை எதிர்கொள்வதற்காக டெண்டுல்கர் ஈரமான டென்னிஸ் பந்தில் பயிற்சி மேற்கொண்டார். இந்த பயிற்சியின் காரணமாக டெண்டுல்கருக்கு முழங்கையில் கடுமையான வலி ஏற்பட்டது. நெதர்லாந்தில் நடந்த போட்டிக்கு முன்பாக டெண்டுல்கருக்கு இந்தப் பிரச்சினை அதிகமானது. இதனால் நெதர்லாந்து மோதல், இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் மற்றும் சாம்பியன் கோப்பை போட்டியில் இருந்து அவர் நீக்கப்பட்டார்.

கடந்த சில வாரங்களாக டெண்டுல்கருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையில் போதிய பலன் கிடைக்கவில்லை. இதன் காரணமாக அதிநவீன சிகிச்சை அளிக்க இந்தியக் கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது. இதன்படி ஷாக்வேவ் தெரபி என்று அழைக்கப்படும் புதிய சிகிச்சையை டெண்டுல்கருக்கு கொடுக்க இந்திய உடல் தகுதி நிபுணர் லெய்பஸ் ([illegible]வு செய்திருக்கிறார்.



எ[illegible]ன்ஸ் நகரில் நடந்த ஒ[illegible]பிக் போட்டியின் போதுதான் இந்த சிகிச்சை முறை முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டது. இதற்கு நல்ல பலன் கிடைத்திருப்பதாக வெளியான செய்தியை அடுத்து டெண்டுல்கருக்கு அந்த சிகிச்சை அளிக்கப்பட இருக்கிறது.




## இறுதிப்போட்டியில் சானியா மிர்சா

ஆசிய டென்னிஸ் இறுதிப் போட்டியில் விளையாட இந்தியாவின் சானியாமிர்சா தகுதி பெற்றுள்ளார். டாஸ்கண்ட நகரில் அசிய டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றது. இதில் நேற்று நடந்த பெண்கள் அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியாமிர்சா 6-2, 6-4 என்ற செட்களில் தாய்லாந்தைச் சேர்ந்தநகபார்ன்டாங்சலீயை வீழ்த்தினார். இதன் மூலம் இவர் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

## பெண்கள் டென்னிஸ் ஹெனின் ஆதிக்கத்திற்கு அமிலி மவுரிஸ்மோ முற்றுப்புள்ளி வைத்தார்



பெண்கள் டென்னிஸ் ஜஸ்டின் ஹெனின் ஆதிக்கத்திற்கு அமிலி மவுரிஸ்மோ (வயது25) முற்றுப்புள்ளி வைத்து தர வரிசையில் முதலிடம் பிடித்துள்ளார்.

டென்னிஸ் வீராங்கனைகள் தரவரிசைப் பட்டியல் நியூயோர்க் நகரில் இன்று வெளியாகிறது. இம்முறை தரவரிசைப் பட்டியலில் ஒரு பெரிய மாற்றம் இருக்கிறது. நீண்ட நாட்களாக முதலிடத்தில் இருந்த பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின்ஹெனின், தனது இடத்தை பிரான்ஸ் நாட்டின் அமிலிமவுரிஸ் மோவிடம் பறிகொடுத்திருக்கிறார். இந்தத் தகவலை பெண்கள் டென்னிஸ் சங்கம் அறிவித்துள்ளது.

தற்போது நடந்து கொண்டிருக்கும் யு.எஸ்.ஓபன் டென்னிஸ் தொடரில் காலிறுதிச் சுற்றுடன் வெளியேறிய அமிலிக்கு இது ஒரு மகிழ்ச்சிச் செய்தி. ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற அமிலி இது வரை ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டம் கூட கைப்பற்றவில்லை. அதிக பட்சமாக 1999 அவுஸ்திரேலிய ஓபன் தொடரில் இறுதிப் போட்டி வரை முன்னேறியிருக்கிறார். ஆனாலும் தொடர்ச்சியாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலமே முதலிடம் பிடித்துள்ளார்.


## யு.எஸ்.ஓபன் மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் ரஷ்யாவின் குஸ்னேஸ்வோ பட்டம் வென்றார்




அமெரிக்க ஓபன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் எலினா டெமன் ரீவாவை அதே நாட்டைச் சேர்ந்த குஸ்னேஸ்வோ 6-3,7-5 என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

அவர் தனது இரண்டாவது செட்டைத் தோல்வியிலிருந்து பாதுகாத்துச் சம்பியனானார். இவர் கிரான்ட்ஸ்லாம் தொடரில் அனாமிஸ் கினாவையும் பிரஞ் ஓபன் போட்டியில் மரியா சரகோவாவையும் வென்றதன் மூலம் இது அவருக்கு மூன்றாவது தொடர் வெற்றியாகும்.

இத் தொடரை வென்றது தனக்கு அதிர்ச்சி அளிப்பதாக இவர் தெரிவித்துள்ளார்.இவர் டெமன்டிவா அமிலிமௌரிஸ் மோவையும் ஜனிபர் கெப்ரியாடியையும் வென்று இறுதிப் போட்டியில் நுழைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## சிந்தனைக்கு

தனது மனவுலக ஆசையிலிருந்தும், அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்து கொள்பவன் தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெற முடியும்

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 13-09-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## உத்தரவாதம் தரமுடியுமா?

முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் உள்ளூரில் தமிழ் மக்களின் வாழ்விற்குச் சர்வதேச சமூகம் செயற்றிட்டம் ஒன்றின் மூலம் உத்தரவாதம் அளிக்க வேண்டுமென அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் முன்வைக்கின்ற கோரிக்கையானது அவசியமானதொன்றே.

விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டுமென சில நாடுகள் வெளிப்படையாகக் கோரி வருகின்றன. இது ஒரு வகையில் அழுத்தம் கொடுக்கும் தொனியிலும் அமைந்துள்ளது. இந்நிலையில் விடுதலைப்புலிகள் தமது மக்களின் கௌரவமான வாழ்விற்கு சர்வதேச சமூகம் உத்தரவாதம் அளிக்க வேண்டுமெனக் கோருவதில் எந்த விதத் தவறும் இல்லை.

ஏனெனில் விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலதன்னாட்சி அதிகார சபை யோசனைகள் பெரும்பாலான நாடுகளினாலும், குறிப்பாக அமெரிக்கா உள்ளிட்ட சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளினாலும் வரவேற்கப்பட்டதொன்றே. இதன் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துமாறு சிறிலங்கா அரசை அவை கோரியதும் உண்டு.

அத்தோடு விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான நகல் திட்டமானது நடைமுறையில் சாத்தியப்பாடானதொன்று எனவும் அந் நாடுகளால் தெரிவிக்கப்பட்டதுண்டு. இதனைத் தவிர இத்திட்டத்தின் அடிப்படையில் முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாரானதும் உண்டு.

ஆனால் தற்போதைய அரசாங்கம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குத் தயாராக இருப்பதாக இல்லை. ஏதாவது ஒரு காரணத்தைக் கூறிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதை இழுத்தடித்து வருகின்றது. அன்றிப் பதட்டமான நிலையை உருவாகிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான சூழ் நிலையை இல்லாது ஒழிக்கும் வகையில் செயற்பட்டும் வருகின்றது.

ஆகையினால் தற்பொழுது பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடும் நாடுகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் ஒன்றை சர்வதேச சமூகம் ஆதரிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதில் தவறு என்ன இருக்கமுடியும்?

இவ்வாறு கோருவதற்கு சர்வதேச சமூகம் மீதான அவநம்பிக்கையோ, தப்பபிப்பிராயமோ காரணமல்ல. சிறிலங்கா அரசாங்கத்துடன் நம்பிக்கையின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்த முடியுமா என்ற ஐயப்பாடே காரணமாகும். அதாவது சிறிலங்கா ஆட்சியாளர்கள் கடந்த காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்ளவில்லை. தமிழ் மக்களை நீண்ட காலமாக ஏமாற்றும் நடவடிக்கைகளைக் கொண்டவர்களாகவே உள்ளனர்.

அதிலும் குறிப்பாக தற்போதைய ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக உறுதியான நிலைப்பாடு எதையும் கொண்டதாக இல்லை. ஆளும் கூட்டணிக்குள் இது தொடர்பான உறுதியான நிலைப்பாடும் இல்லை. யுத்த விரும்பிகளே அதிகம் பேர் உள்ளனர். அதிலும் குறிப்பாக ஜே.வி.பி யினர் அதிகாரப் பரவலாக்கலை முற்றாகவே நிராகரிக்கின்றனர்.

இன்றைய ஆட்சியாளர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துப் பிரஸ்தாபிப்பதே நிதியுதவி என்ற ஒன்றிற்காக மட்டுமே. அந்நிதியுதவியானது பேச்சுவார்த்தையின் முன்பு கிடைத்தாலும் சரி பின்பு கிடைத்தாலும் சரி சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் உடனடியாகவே கைவிட்டுவிடக்கூடும். நிதியுதவிக்காகப் பேச்சுவார்த்தை நடத்துவதைக் கண்டிக்கும். ஒரு பலமான தரப்புக் கூட ஆளும் தரப்பிற்குள் உண்டு.

இந்த நிலையில் விடுதலைப்புலிகளிடம் கோரிக்கை விடுபவர்களோ அன்றி அழுத்தம் பிரயோகிக்க விரும்புவார்களோ யாராக இருப்பினும் சரி, சிறிலங்கா அரசாங்கத்திடம் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான உத்தரவாதம் எதையும் பெறமுடியுமா? தமிழ் மக்களின் கௌரவமான வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்க முடியுமா?

அத்தகைய தொரு உத்தரவாதத்தைப் பெற்றுத்தர எந்தவொரு தரப்பும் தயாராக இருக்கும் போதே பேச்சுவார்த்தை மீது தமிழ் மக்களினால் நம்பிக்கை கொள்ள முடியும். சிறிலங்கா ஆட்சியாளர்கள் எந்த வொரு முடிவிற்கும் வராத நிலையிலும், எந்தவித உத்தரவாதத்தையும் அளிக்காத நிலையிலும், புலிகளைச் சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் செல்லுமாறு கோருவதும், வற்புறுத்த முனைவதும் சிறிலங்கா ஆட்சியாளர் தரப்பில் இருந்து பிரச்சினை நோக்கப்படுவதாகவே தமிழ் மக்களினால் கருதப்படும்.

### திருமலை நீதிமன்ற கட்டடத்திறப்பு விழாவில்

# சிறிலங்கா தேசியக் கொடி ஏற்றப்படாமைக்கு ஜே.வி.பி. பா.உ. கடும் ஆட்சேபம்

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற நீதிமன்ற கட்டட திறப்பு விழாவில் சிறிலங்கா தேசியக் கொடி ஏற்றப்படவில்லை எனவும் இதற்கு ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடும் ஆட்சேபம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. நேற்று சிறிலங்கா தலைமை நீதியரசர் சரத் என் சில்வாவினால் இந்த நீதிமன்றக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

இதனை திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. கட்டடத்திறப்பின் பின்னர் நீதிமன்ற கட்டடத்திற்குள் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், நிகழ்வில் சிறிலங்கா தேசியக் கொடி ஏற்றப்படாமைக்கு எதிர்ப்பு வெளியிட்ட ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர பலாத் காரமாக நிகழ்விடத்துக்கு வந்து சிறிலங்கா தேசியக் கொடியை ஏற்றியதாக தெரிவிக்கப்படுகிறது இதற்கிடையில் நிகழ்வில் தமக்கு ஆசனம் ஒதுக்கப்படவில்லை என்பதை ஆடசேபித்து திருகோணமலை அரசாங்க அதிபர் காமினி ரொட்ரிகோ நிகழ்வு மண்டபத்தில் இருந்து இடையில் வெளியேறினார். (32)

# அனைத்து அமைச்சுக்களிலும் ஜே.வி.பி.யின் ஆதிக்கம் அதிகரிப்பு

### சனாதிபதக்கு தேசிய செய்திகள் சேகரிப்புச் சங்கம் முறையீடு

(கொழும்பு)

பாது காப்பு அமைச்சு உள்ளிட்ட ஏனைய அமைச்சுக்களில் ஜே.வி.பி.யின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளதென்று தேசிய செய்திகள் சேகரிப்பு சங்கம் சனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் தொடக்கம் கீழ்மட்டச் சிப்பாய்கள் வரை ஜே.வி.பி. யினருக்கு ஆதரவுகள் வழங்கி வருகின்றனர் என அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அறிக்கையின் பிரதி ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் விக்கிரம சிங்கவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# சமாதான முயற்சிகளுக்குப் பொறுப்பான இணைத்தலைவர்களாக மகிந்த, ரணில்

### சனாதிபதி சந்திரிகா முயற்சி

பிரதமர் மகிந்த ராஜ பகஷவையும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவையும் சமாதான முயற்சிகளுக்குப் பொறுப்பான இணைத் தலைவர்களாக நியமிப்பதற்கு சனாதிபதி தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது சனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் கடந்த வியாழனன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இவ்விடயம் குறித்து உத்தியோகபூர்வமற்ற வகையில் கருத்து பரிமாறப்பட்டதாகவும் எனினும் இணக்கப்பாடு எதுவும் ஏற்படவில்லை எனவும் சனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தொிவிக்கின்றன. எவ்வாறெனினும் சமாதான முயற்சிகளின் இணைத் தலைமைப் பதவியை எதிர்க்கட்சித் தலைவரை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு இராஜதந்திர வட்டாரங்கள் மூலமும் முயற்சி செய்வதற்கு சனாதிபதி தீர்மானித்துள்ளார். அரசாங்கத்தின் சார்பில் சமாதான முயற்சிகளின் இணைத்தலைவர் பதவியை ஏற்குமாறு பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவிடம் சனாதிபதி ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளார். இத் தலைவர்கள் சபையின் மேற்பார்வையின் கீழ் மற்றொரு சமாதான சபையொன்றை ஏற்படுத்தி சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதே சனாதிபதியின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக சிறுபான்மைக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவர் உத்தேசித்துள்ளாரென சனாதிபதி மாளிகையின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் சமாதான முயற்சிகளின் இணைத்தலைவர் பதவியை ஏற்பதற்கு எதிர்க்கட்சித் தலைவரின் சம்மதம் கிடைத்தால் நாளை இலங்கைக்கு வரவுள்ள நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக்சூல்ஹெய்முக்கு இது குறித்து அறிவித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள சனாதிபதி உத்தேசித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

# தேசிய ஆலோசனைச் சபைத் திட்டத்தை தமிழ்க் கூட்டமைப்பு நிராகரித்தது

சனாதிபதியால் முன் மொழியப்பட்டுள்ள சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான தேசிய ஆலோசனைச் சபைத் திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றாக நிராகரித்துள்ளது. விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பது தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தும் சனாதிபதியின் இந்தத் திட்டத்துக்கு எதிர்க் கட்சிகளும் ஆதரவு வழங்கக் கூடாது என்று எதர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. கடந்த வியாழனன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க சந்தித்தார். இதன்போது, சனாதிபதி இந்த திட்டத்தை எதிர்க்கட்சித் தலைவரிடம் எடுத்துக் கூறியிருந்தார். அப்போதே சனாதிபதியிடம், இந்தத் திட்டத்தால் பயன் எதுவும் இல்லை என்றும் தேவையில்லாமல் சபைகளை அமைத்துக் காலத்தை இழுத்தடிக்காமல் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் பேச்சுகளை ஆரம்பிப்பதே சிறந்த வழி என்றும் ரணில் கூறினார் என்று ஐ.தே.க. தரப்புக்கள் தெரிவித்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிக்கையில்: அரசாங்கம் கடந்த ஜூலை மாதம் புலிகளிடம் தமது தீர்வு வரை வொன்றைச் சமர்ப்பித்துள்ளது. அதற்குப் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பதில் வரைவை முன் வைத்துள்ளார்கள். இனி மேல், அதற்கு மீண்டும் பதில் வரைவு சமர்ப்பிப்பது என்றும் விதம் விதமான ஆலோசனை சபைகள் என்றும், காலத்தை இழுத்தடிக்கக் கூடாது. கடந்த 50 வருடங்களாக ஆட்சியிலிருந்த அரசுகள் அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்திக் கொண்டு தான் இருக்கின்றன. இனியும் ஆலோசனை, கலந்துரையாடல் என்று குழு அமைத்துக் கூடிப் பேசிக் கொண்டிருப்பது, அன்றாடம் யுத்த பீதியிலிருக்கும் மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தை மீண்டும் இழுத்தடிப்பதாகவே முடியும். சனாதிபதியின் இந்தப் புதிய திட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் ஆதரவு வழங்காது. கடந்த வருடம் நவம்பர் மாதம் 4ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கலைத்ததன் மூலம் ஐ.தே.மு. அரசு மேற் கொண்டுவந்த சமாதான முயற்சிகளுக்கு சனாதிபதி முட்டுக்கட்டை போட்டு தீர்வுக்கான காலத்தை இழுத்தடித்தார். தற்போது, மேலும் காலத்தை இழுத்தடிக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கிறார். அவர் அரசியல் சுயலாப நோக்குடன் மேற் கொள்ளும் நடவடிக்கைகள் நாட்டின் தேசிய பிரச்சினைக்கான தீர்வைப் பின் தள்ளிக் கொண்டே போகின்றன. இனியும் தமிழினம் சிங்கள தேசத்தின் இத்தகைய அரசியல் குத்துக்கரணங்களுக்கு தாளம் போட்டுக் கொண்டிருக்கமாட்டாது எனத் தெரிவித்தார்.

# உரியபொருளாதார திட்டமின்மையால் நாட்டின் பொருளாதாரத்தில் வீழ்ச்சி

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

அரசாங்கத்திடம் உரிய பொருளாதார திட்டம் இல்லாமை காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. நாட்டில் அடுத்து வரும் வாரகாலப்பகுதிக்குள் டீசல் பெற்றோல், மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றின் விலைகளும் உயரவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அந்தக்கட்சி இந்த வருட இறுதிக்குள் எரிவாயுவின் விலை ஆயிரம் ரூபா வரை உயரும் எனவும் எதிர்வு கூறியுள்ளது. கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் விவசாய அமைச்சருமான எஸ்.பி திஸாநாயக்க நேற்று கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் இந்த குற்றச்சாட்டைச் சுமத்தினார்

சனாதிபதி விவசாயம் தொடர்பாக ஒரு கருத்தை வெளியிடும் போது விவசாய அமைச்சரான அனுரகுமார திஸாநாயக்க மாற்றுக கருத்தை வெளியிடுகிறார். அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட குளங்களைப் புனரமைக்கும் திட்டத்திற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக சனாதிபதி கூறியுள்ள போதும் 9 மில்லியன் ரூபாய்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்து வருகிறார். எதிர்வரும் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் விவசாயத்துறைக்கு 800 மில்லியனை ஒதுக்கீடு செய்யுமாறு அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார். எனினும் அதிலும் நிதியமைச்சு குறைப்பு செய்துள்ளதாக எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். நாடு மீண்டும் ஒரு வரிசை முறைக்கு தள்ளப்படப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன 70 வீத சம்பள உயர்வைத் தரப்போவதாக தெரிவித்த அரசாங்கம் இன்று பொருட்களின் விலைகளையே உயர்த்தியுள்ளதாகத் தெரிவித்தார். (32)

### இந்தியக்...

அத்துடன் பிரதிப் பாதுகாப்புத் துறை அமைச்சரையும் அவர் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.. தமது விஜயத்தின் போது திருகோணமலைக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ள அவர், அங்கு ஒருநாள் முழுமையாகத் தங்கியிருப்பார் எனவும் தெரிய வருகின்றது. வைஸ்அட்மிரல் அருண்பிரகாஸ் கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்றபின் அவர் மேற்கொள்ளும் முதலாவது கடற்பயணம் இதுவாகும். (32)

# புளியங்குளத்தில் வீதிவிபத்து உந்துருளிப் பயணிகள் இருவர் படுகாயம்

ஏ-9 சாலையில் புளியங்குளம் பகுதியில் நேற்று நடைபெற்ற வீதிவிபத்தின் போது இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை புளியங்குளம் பகுதியில் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கிவந்துகொண்டிருந்த உந்துருளியும் கிளிநொச்சியிலிருந்து புளியங்குளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பேருந்தும் நேருக்குநேர் மோதிக் கொண்டதிலேயே இரு இளைஞர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயத்திற்குள்ளான நகரசபை விடுதி, வவுனியாவைச் சேர்ந்த கனகசபை முகுந்தன், வவுனியாவைச் சேர்ந்த தேவராசா கோபால் ஆகிய இருவரும் உடனடியாக அனுராதபுரம் அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இவ்விருவரும் தமது உந்துருளிக்கு முன்பாக வந்துகொண்டிருந்த பாரவூர்தியைக் கடக்க முற்பட்டவேளையிலேயே எதிரே வந்த பேருந்துடன் மோதியதாகவும், அதிவேகமாகப் பயணித்ததனாலேயே இவ்விபத்து ஏற்பட்டதாகவும் தமிழீழ காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். இதேவேளை காயமடைந்த இருவரினதும் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

### பேச்சுவார்த்தை...

தின்போது விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களையும், சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் சந்தித்து சமாதானப் பேச்சு வார்த்தைக்கான நிகழ்ச்சிநிரல் தயாரிப்பது குறித்துக் கலந்துரையாடப் போவதாகவும் கூறியுள்ளார்.

### கேணல்....

புறப்பட்டுச்சென்றனர். சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் பயணித்த இவர்களை விடுதலைப்புலிகளின் பல முக்கியஸ்தர்கள் வழியனுப்பி வைத்தனர். (ச)

# நல்லூர் ஆலயச் சூழலில் இளைஞர் ஒருவர் மீது தாக்குதல்

## இரு இளைஞர்கள் கைது

(நல்லூர்)

நல்லூர் ஆலய வீதியில் இரு இளைஞர்களினால் தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் மயக்கமுற்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நல்லூர் ஆலய தெற்கு வீதியில் இரவு 8.00 மணியளவில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து ஆலய வீதியில் செயற்படுகின்ற சிறப்புச் செயல் அணியினரால் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த பிரான்சிஸ் றொவின்சன்(வயது18), அந்தோனிப்பிள்ளை நிருபன் (வயது 20) ஆகிய இருவரும் பிடிக்கப்பட்டு யாழ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் காயப்பட்டவர் அரியாலைச் சேர்ந்த சச்சிதானந்தம் இமானுவேல் (வயது 18) என்பவராவார். (40)

### இலங்கைக்கு....

அரசு இலங்கைக்கு வருடாந்தம் வழங்கும் நிதியுதவிகள் தொடர்பாக அந்த நாட்டின் பிரதிநிதிகளோடு நிதியமைச்சின் செயலாளர் கடந்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். வருடாந்தம் இருபத்தைந்து மில்லியன் டொலர்களையே இலங்கைக்கு நோர்வே அரசு நிதியுதவியாக வழங்கி வந்த போதிலும், அடுத்த வருடம் அந்தத் தொகையை ஐந்து மில்லியன் டொலர்களால் அதிகரிப்பதற்கு நோர்வே அரசு தீர்மானித்திருப்பதாக நிதியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

### புல்லுமலை...

இருக்கலாமென சிறிலங்கா பொலிசார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். இதேவேளை இந்தப் பிரதேசத்திலுள்ள மக்களின் தகவலின் படி இந்தத் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னதாக இந்தக் காட்டுப் பகுதியில் ஆயுதக் குழுவொன்று இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்ததாகவும் தாக்குதல் சம்பவத்திற்குப் பின் இவர்களது நடமாட்டம் அங்கு காணப்படவில்லையென்றும் தெரியவருகின்றது. இது தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்பாளர்கள் சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தைப் பார்வையிட்டுள்ளனர்.


# சாவு அறிவித்தல்

வழுத்துண்டலைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜேசுதாசன் நெப்பன் பிரதீஸ் 12-09-2004 ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணமடைந்தார். இவர் ஜேசுதாசன் மேரி மாகலன் ஆகியோரின் அன்பு மகனும் கல்பனா (ஆசிரியர்), சுரேஸ், றீகன் ஆகியோரின் அன்புத் தம்பியும், பிரசாந்தின் அன்பு அண்ணாவும் ஆவார். இவரின் நல்லடக்கம் 14-09-2004 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு (புதிய நேரம்) புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலியுடன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் மிகவும் மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம்

தகவல்.
தந்தை ஜேசுதாசன்
சின்னத்துரை

(சி.10401)


### சிறிலங்கா...

களில் ஈடுபட்டுள்ளது. எவ்வாறாயினும் சிறிலங்கா அரசாங்கமும் சிலசர்வதேச செயற்பாட்டாளர்களும இக்காலப்பகுதியை விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சிக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

கருணா விவகாரமும், அதனுடன் தொடர்ந்த வன்முறைகளும் இந்த மூலத்திட்டத்தின் செயற்பாடுகளே. சிறிலங்கா அரசாங்கம் இந்த வன்முறைகள் மூலம் சில பிரதேசங்களில் ஸ்திரமின்மையைத் தோற்றுவிக்க முயல்கிறது. நாங்கள் வன்முறைகளை முற்றாக நிராகரிக்கிறோம். மேலும் வன்முறைகளும் இரத்தக்களரிகளும் தோன்றுவதற்கான சூழலை உருவாக்க வேண்டாமெனச் சிங்களத் தலைமைகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

சிறிலங்கா அரசாங்கம் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான சிறுவாய்ப்புக்காக காத்திருக்கிறது என்பது குறித்து நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

# பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர் கொழும்பில் சுட்டுக்கொலை

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.



முன்பு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுவந்த ஜிப்பாய் என்பவரே கொல்லப்பட்டவரென பொலிசார் இனங்கண்டுள்ளனர். அலெக்சாண்டர் மாவத்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மற்றுமொருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலை மேற்கொண்ட மற்றொரு பாதாள உலகக் குழுவைச சேர்ந்தவர்கள் அங்கிருந்து முச்சக்கரவண்டியொன்றில் தப்பிச் சென்றுள்ளார்களென்று பொலிசார் தெரிவித்தனர். பாதாள உலகக்குழுவினர் இத்தாக்குதலுக்கு ரி-56 ரகத் துப்பாக்கியினையும் 9மில்லி மீற்றர் குழல் துப்பாக்கியையும் பயன்படுத்தியுள்ளார்களெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு குற்றத் தடுப்புபிரிவினரின் கறுவாத் தோட்டப் பொலிசார் இந்தக்கொலைச சம்பவம் பற்றி விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தென்பகுதிப் பல்கலை மாணவர்களுடன் விடுதலைப்புலிகள் சந்திப்பு

(நல்லூர்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் தென்னிலங்கை பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் தமிழ் மாணவர்களுடனான சந்திப்பு நேற்றுக் காலை ஒன்றிய அலுவலகத்தில் தலைவர் ப.பகீரதன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறை துணை பொறுப்பாளர் செம்மணன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி, யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப்பொறுப்பாளர் எழிலன்பன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (40)

## -சச்சி மாஸ்டர் கொலை தொடர்பான-

# சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு பணிப்பு

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா குழுவைச் சேர்ந்த சச்சி மாஸ்டர் உட்பட இருவர் சுட்டுக் கால்லப்பட்ட சம்பவம் தொடர்புடைய சந்தேக நபரான மகேந்திரன் புவிதரனை எதிர்வரும் 20ஆம் திகதி தவணையின் போது கட்டாயம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் உத்தரவிட்டுள்ளார். தற்போது பதுளை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இவர் ஏற்கனவே 2 தவணைகளில் ஆஜர்படுத்துவதற்காக நீதிமன்றம் அழைத்து வரப்படவில்லை.

இவரை அழைத்து வருவது தொடர்பாக தாம் பாதுகாப்பு பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார். இதனை ஏற்றுக்கொண்ட மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எதிர்வரும் தவணையின் போது கட்டாயம் ஆஜர்படுத்த வேண்டும் என உத்தரவிட்டார்.

இதேவேளை பொலனறுவை சிறைச்சாலையில் பாதுகாப்பின் நிமித்தம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ உளவாளியை எதிர்வரும் தவணையின் போது பொலனறுவை நீதிமன்றத்தில் முன்னிறுத்துமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதி மட்டக்களப்பு புறநகரில் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்ட இராணுவ உளவாளியான சுப்பிரமணியம் யோகநாதன் என்பவர் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. குறிப்பிட்ட நபர் பொலனறுவைச் சிறைச்சாலையிலிருந்து பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார். எதிர்வரும் தவணையின் போது இவரை அழைத்து வருவதில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் இருப்பதாக சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தார். இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி சந்தேக நபரை எதிர்வரும் 23ஆம் திகதி தவணையின் போது பொலன்னறுவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டார்.

### குழாய்க்...

கனரக புல்டோசரொன்றும் பல தொழிலாளரும் இப்பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில் நேற்று நண்பகல் வேளை குழாய்க் கிணறொன்றைத் தோண்ட ஏதுவாக சுமார் ஆறுஅடி ஆழமான கிடங்கொன்றினை தொழிலாளர்கள் வெட்டியுள்ளனர்.

அக்குழியினுள் மேற்குறித்த தொழிலாளி இறங்கிய வேளை திடீர் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மண்ணால மூடப்பட்ட அவரை மீட்க சகதொழிலாளர்கள் முற்பட்டபோதும் அது சாத்தியமாகவில்லை.

தோண்டப்பட்ட குழியின் ஓரமாக குகை போன்றகிடங்கொன்று காணப்பட்டதாகவும், குழியினுள் இறங்கிய குறித்த தொழிலாளி அதனை அடைக்க முற்பட்ட வேளையிலேயே மண்சரிவு ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (27)

### கொழும்பில்....

இதேவேளை வர்த்தகர்கள் தாம் நினைத்தபடி பாணின் விலையை அதிகரித்துள்ளனர். இதனைக் கட்டுப்படுத்துவதற்காக பாணை ஒரு அத்தியாவசியப் பொருளாக பிரகடனப்படுத்துப்பட்டுள்ளதாக வாணிபத்துறை அமைச்சா ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.